433

OFFICE OF THE ... 18 JUL 1937 ... MADRAS

108

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-நச.] ஈசுவரஞூ ஆடிமீ [பகுதி-௯.
Vol. 34. July—August 1937. No. 9.

உள்ளுறை.

கம்பராமாயண சாரம்:— ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். உஎரு—உஅஉ
பாஞ்சராத்திரம்:— ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார். B.A., B.L. உஅந—உகூ0
தமிழ்வழக்கு:— பத்திராசிரியர். உகூக—உகூச
புல்லையந்தாதி:—ஸ்ரீமத். வித்வான். இராமையங்கார். உகூரு—ந00
பவணர்வரலாறு:—ஸ்ரீமத். த. இராமநாதபிள்ளை B.A. (Lond) ந0க—ந0சு
சந்திரகுப்தன்:— ஸ்ரீமத். N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L., 7–14
குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 433—448

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

...ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1937.

..., Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and
...u. Narayana Iyengar at the Tamil Sangam Power Press,
No 54, New Jail Road, Madura.

25074.

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| *8 | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் . | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

18 JUL 1937

உ

கடவுள் துணை


# செந்தமிழ்.

[தொகுதி-௩௪.] ஈசுவரஹு ஆடி மீ [பகுதி-௯.

Vol. 34. July—August 1937. No. 9.


## கம்பராமாயண சாரம்.

[௨௫௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கும்பகருணன் ஆலோசனை.

[கும்பகருணன், 'எதிரிகள் இங்கே வந்தால், எதிர்ப்போம்' என்ற இராக்கதரை விலக்கி, இராவணனை நோக்கிக் கூறுகின்றான்:—

'கண்ணுக்கினிதாயிருக்கிறதென்று அக்கினிச்சுவாலையைக் கட்டித்தழுவ இச்சைப்படுதல்போல, அழகாயிருக்கிறாளென்று கற்புத்தீயான சீதையைக் காதலிக்கின்றாய்.* அநியாயமாக, இலங்காபுரி எரியுண்டதென்றும், அரசாட்சி அழிந்ததென்றும் வருந்துகின்றாய். வலிய சிறையிலே மற்றொருவன்மனைவியை வைத்தல் நியாயமோ? உன்மனைவியர் புன்முறுவல்பூத்த முகத்தினராய் உன்னை வரவேற்க ஆவலுடனிருப்பவரை அலட்சியஞ்செய்து மற்றொருவன்மனைவிகாலில் மாறிமாறி விழுந்து மறுபடியும் மறுபடியும் மறுக்கப்படுதல் புகழ்வளர்த்தல்போலும்!']

4 ஆசில்பர தாரமடை யச்[1]சிறை யடைப்பேம்[2]
மாசில்புகழ் காதலுறு வேம்[3]வளமை கூரப்
பேசுவது மான[4]மிடை பேணுவது காமம்[5]
கூசுவது மானுடரை நன்றுநம கொற்றம்.

---

* இப்படலம் ௪௮-ஆம் பாட்டில் 'தீயினை நயப்புறுதல் செய்தனை' என்பதன் விளக்கவுரை.

*

கொண்டுகூட்டு:—'ஆசு இல் பரதாரம் சிறை அடைய அடைப்பேம். மாசு இல் புகழ் காதலுறுவேம். வளமைகூரப் பேசுவது மானம். இடை பேணுவது காமம். கூசுவது மானுடரை. நமகொற்றம் நன்று!

பொருள்:—நாம் பிறன்மனைவியைச் சிறையிலடைப்போம்; (அத்தீயசெயலைச் செய்தபின்பும்) புகழ் (நீங்காதிருக்க) விரும்புவோம். வளமைகொழித்துப் பேசுவதோ கவுரவம்; விரும்புவதோ (அக்கௌரவத்தைக் கெடுக்கும்) காமம். நாம் அஞ்சிப் பின்வாங்குவது மனிதருக்கு. (மனிதருக்கே அஞ்சும்) நமது வீரம் நன்றாயிருக்கிறது!

ஆசு இல் - குற்றம் இல்லாத. பரதாரம் - வடமொழித்தொடர். பரன் - அந்நியன். தாரம் - மனைவி. சிறை - சிறைச்சாலை. பரதாரம் சிறை அடைய அடைப்பேம் எனக் கொண்டுகூட்டுக: அந்நியன் மனைவியைச் சிறைச்சாலையிற்சேரும்படி அதில் அடைப்போமென்பது பொருள். மாசு - குற்றம். காதலுறுதல் - விரும்புதல். வளமைகூரப் பேசுதல் - வளமைகொழித்துப் பேசுதல். மானம் - கவுரவம். இடை - மத்தியகாலம் (தமிழகராதி) - (காதலுறுதல் பேசுதல்களுக்கு) மத்தியகாலங்களிலே. பேணுதல் - விரும்புதல். கூசுதல் - அஞ்சிப் பின்வாங்குதல். 'கூசி ஆவி குலைவுறுவானையும்' (நிந்தனைப்படலம் ௨௨). நம-நம்முடைய. கொற்றம் - வீரம். 'பெரும்படைக் கொற்றம் பீடழிந்து' (தமிழகராதி).

பாடபேதம்:—[1] அவையஞ், அமையச். [2] சிறையில்வைத்தாய், சிறையடைத்தோம். [3] உறுவாய். [4] வீரம். [5] மானம்.

['இனிச் சீதையைச் சிறைவிடுதல்செய்வேமேல் வலியற்றவரெனமதிக்கப்படுவேம். அவளை விடுத்லினும்விரோதிகளால்வெல்லப்படுதல் மேலாம். நாம் இப்போதே சென்று எதிரிகளை எதிராவிட்டால், அவர்களோடு தேவரும் உலகத்தார் யாவரும் சேர்ந்துகொள்வார்கள். அப்படி அவர்களுக்குப் படைதிரண்டு பலமிகுந்திடுமுன் கடல்கடந்து வெல்லுதற்குச் செல்லுதலே செய்யத்தக்கது.' என்று கும்பகருணன் கூறினான்.

## இந்திரசித்து ஆலோசனை.

இராவணன், கும்பகருணன் கூறியதற்கிசைந்து, 'இதுவே யான் எண்ணியதும். இனி ஆலோசிக்கவேண்டியதில்லை. யாம் இன்று சென்று எதிரிகளைக் கொன்றுதிரும்புவோம்' என்றான்.



அப்போது, இந்திரசித்து எழுந்து, 'நீ கோபங்கொண்டு போர்புரிதற்கு அற்பமனிதர் அருகதையுடையரோ? அச் சிறியாரைச் சேனையுடன் எதிர்க்கச் செல்லுவதும் வெல்லுவதும் திரும்புவதும் உன்பெருமைக்கு ஒவ்வுமோ? அவ்வேலையைச் செய்யத்தக்கார் எத்தனையோ இராக்கதர் இருக்கிறார்கள். யானொருவனும் இருக்கின்றேன். மூன்றுலகத்தாரோடு சேர்ந்து முதற்கடவுளரான மும்மூர்த்திகளே எதிர்ந்தாலும், வெற்றி உனதேயாகப் போர்த்தொழில் புரியேனானல், நீ என்னைப் பெற்றும் பெறுதாயாவாய்.* யான் உனக்குப் பிறந்தும் பிறவாதேனாவேன்.† எதிரிகள், யானையோ குதிரையோ தேரோ யாதுமில்லாதவர்; தேவரல்லர்; மனிதரே. அப்படிப்பட்ட அற்பர்கள் கூனல்முதுகுடைய குரங்குகளைக்கொண்டோ, நால்வகைப்படையுடைய நம்மை வெல்வார்கள்? மனிதர் வானரரென்ற பேரே வேரோடழிய வென்று திரும்புவேன். விடைதருக' என்றான்.

## விபீடணன் ஆலோசனை.

அப்போது விபீடணன், எழுந்து, கோபங்கொண்டு, 'செய்யத்தக்க காரியத்தையும் காலத்தையும் தெரியத்தக்க கல்வியும் அறிவும் இல்லாத சிறுவனான நீ ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தோர் அமர்ந்திருக்கும் ஆலோசனைக்கூட்டத்தில் இருக்கத்தக்காயல்லை. அறிவிலியும் கண்ணிலியுமான ஒருவன் சித்திரித்த சித்திரம் போன்ற உருப்படாத யோசனையை உரைத்தாய். முன்செய்த தவப்பயனாக மும்மூர்த்திகளையும் வென்று மூவுலகையும் ஆண்டவர்கள் அதர்மவழியிலொழுகி அழிந்தார்கள். தேவரை வென்று நிலையாக நின்றவர் யாவருமிலர். நீ, செய்த தபோபலத்தால் தேவரைவென்றாய். அதர்மத்தை அநுசரித்து அழிந்துபோகாதே. பிள்ளைத்தன்மையினாலும் பேதைப்புத்தியினாலும் பேசத்தகாதவைகளைப் பேசினாய்' என்று, இந்திரசித்தை அதட்டி அமர்த்திவிட்டு, இராவணனைநோக்கி, 'நீ என்வார்த்தைகளை இகழாது கேட்பாயானல், யான் தேர்ந்து தெளிந்த உறுதிப்பொருளை

* பெற்றதனாலாயபயனை அடையாதவனாவாய். † பிறந்ததனாலாய பயனை அடையாதவனாவேன்.

உரைப்பேன். எனக்குத் தந்தை நீயே. தாயும் நீயே. தெய்வமும் நீயே. எல்லாம் நீயே. மகோந்நதபதவியை வம்பாக இழக்கின்றாயேயென்று வருந்துகின்றேன். யான் இயம்புவதை இடையிலே தடைசெய்யாமல் கேட்பாயாக. உனது கோநகரைச் சுட்டது குரங்கன்று, சீதாதேவியின் கற்பே. (குரங்கின் வாலிற் கொளுத்திய நெருப்பு ஊரைச்சுட்டது, வாலைச்சுடாதது கற்பின்மகிமையே.) "இராவணன் இயற்றிய தவப்பயன் ஒரு மனிதவனிதை* யால் அழிதலடையும்" என்ற உலகப்பேச்சு உண்மையாய்விடும் போலும். மலரோனிடம்† வரம் வாங்கினபோது மனிதரால் மாளாத வரத்தை வாங்கினாயில்லை. அதனால், மனிதனான கார்த்தவீரியார்ச்சுனனிடம் கருவபங்கம் அடைந்தாய். "குரங்குகளாற் குறையுறுவாய்" என்ற நந்திசாபத்தால் வாலியிடம் தோல்வியடைந்தாய். நீ விரகங்கொண்டு தீண்டிய வேதவதி, தீக்குளித்துச் சீவனைவிடும்போது "உன்னையும் உன் இனத்தாரையும் ஒழிக்கப்பிறப்பேன்" என்று உரைத்தபடி சீதாதேவியாகச் சென்மித்திருக்கின்றாள். உன் எதிரிகளான இராமலக்குமணர், இந்திரனைச் செயித்த சம்பராசுரனை வென்றவனும் உண்மையைக் காக்க உயிரைப்போக்கியவனுமான தசரதனுடைய குமாரர்கள். அவர்கள், பிரமசிருட்டிக்குப் பிரதி சிருட்டிக்கவல்ல விசுவாமித்திரமுனிவன் சிவனிடம் பெற்றவைகளும் இமைக்குமுன் எல்லாவுலகங்களையும் அழிக்கவல்லவைகளுமான படைக்கலங்கள் கொடுத்திடப் பெற்றவர்கள்; திருமால் கருடாரூடனாய் ஏகனாய் அசுரரோடு பொருதபோரில் ஏந்தியிருந்த வில்லையும் சிவன் திரிபுரம் எரிய எய்த அம்பையும் அகத்தியமுனிவன் அளிக்கப் பெற்றிருக்கிறார்கள். தேவதேவர் மூவரும் வேறு யாவரும் நிகரில்லாதவர்கள்.]

5 இசையுஞ் செல்வமு[1] முயர்குலத் தியற்கையு மெஞ்ச
வசையுங் கீழ்மையு மீக்கோளக் கிளையொடு மடியா[2]
தசைவில் கற்பினவ்[3] வணங்கைவிட் டருளுதி யதன்[4]மேல்
விசைய மில்லெனச் சோல்லின னறிஞரின்[5] மிக்கான்.

* வனிதை - பெண். † மலரோனிடம் - பிரமனிடம்.



கொண்டுகூட்டு: 'இசையும் செல்வமும் உயர்குலத்து இயற்கையும் எஞ்ச, வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடு மடியாது, அசைவு இல் கற்பின் அவ் அணங்கை விட்டருளுதி. அதன்மேல் விசயம் இல்' என அறிஞரின் மிக்கான் சொல்லினன்.

பொருள்: உனது கீர்த்தியும் செல்வமும் உயர்குலத்துக்குரிய இயல்பும் குறைந்துபோகவும் அபகீர்த்தியும் தாழ்வும் அதிகமாகவும் சுற்றத்தாரோடு மடிந்துபோகவும் செய்யாமல் சலியாத கற்புடைய சானகியை விடுவாயாக. அவளை விடுதலினும் மேலான வெற்றியில்லை' என்று அறிவாளிகளிற் பெரியோனான விபீடணன் சொன்னான்.

இசை - கீர்த்தி. இயற்கை - இயல்பு. வசை - அபகீர்த்தி. கீழ்மை - தாழ்வு. மீக்கொளல் - மிகுதல். அசைவு இல் கற்பு - உறுதியான கற்பு. விசயம் - வெற்றி.

பாடபேதம்: [1] செய்கையும். [2] முடியா. [3] கற்பினள். [4] இதன். [5] அறிவினால்.

இராவணன் விபீடணனை இகழ்ந்துபேசல்.

6 கேட்ட வாண்டகை கரத்தொடு கரதலங்[1] கிடைப்பப்[2]
பூட்டி[3] வாய்தோறும் பிறைக்குலம் வெண்ணிலாப்[4] பொழிய
நாட்டந் தீயெழ நலந்திக ழாரமு[5] மார்பும்
தோட்ட லங்களும் குலுங்கநக் கிவையிவை[6] சொன்னான்[7].

கொண்டுகூட்டு: கேட்ட ஆண்டகை, கரத்தொடு கரதலம் கிடைப்பப் பூட்டி, வாய்தொறும் பிறைக்குலம் வெள் நிலாப் பொழிய, நாட்டம் தீ எழ, மார்பும் தோள்தலங்களும் நலம்திகழ் ஆரமும் குலுங்க, நக்கு இவை இவை சொன்னான்.

பொருள்: (விபீடணன் கூறியதைக்கேட்ட) இராவணன், (ஒருபது) கைகளோடு (மற்றொருபது) கைகள் எதிர்(த்து அடி)க்கும்படி பொருத்திப் பத்துவாய்களிலுமுள்ள பிறைச்சந்திரன் போன்ற (நிறமும் வடிவமுமுள்ள) பற்கள் வெள்ளொளி வீச, இருபது கண்களிலும் கோபத்தீ உண்டாக, மார்பும் (இருபது) தோள்களும் (அவைகளில் அணிந்திருந்த) மாலைகளும் குலுங்க (க்

கோபமும் பரிகாசமும் கலந்த சிரிப்பு)ச் சிரித்து இவ் வார்த்தைகளைச் சொல்வானானான்.

ஆண்டகை - ஆண் தகை - ஆண்தன்மை (உடையவன்) - பெருமையிற் சிறந்தோன். கிடைத்தல் - எதிர்த்தல்; 'கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிரெதிர் கிடைப்ப'. (நிந்தனைப்படலம் ௬௧). காட்டம் - கண். கலம் - அழகு. நகுதல் - சிரித்தல். நக்கு - சிரித்து.

'பிறை'யாகிய உவமானத்தால் 'வீரப்பல்' ஆகிய உவமேயத்தைப் பெற வைத்தார்.

மற்றவர்திறத்தில் வாய் என ஒருமையிற்கூறல்போலன்றி இராவணன்திறத்தில் பத்துவாயெனப் பன்மையிற்கூறலே பொருத்தமென்பது குறிக்க, 'வாய்தோறும்' என்றார். 'கரம்' 'கரதலம்' இரண்டும், ஒருமை பன்மைக்குப் பொதுவான பால்பகா அஃறிணைப்பெயர்களாதலால், பத்துக் கரம் பத்துக் கரதலம் எனக் கொள்ளும்படி நின்றன.

பாடபேதம்: [1] கைத்தலம். [2] கிடைக்க. [3] பூட்ட. [4] எயிற்றிளம் பிறைக்குலம். [5] வாட்டக் திகழாரமும் வயங்கொளி, வாட்டக்திங்களாரமும் வயங்கொளி. [6] இனையன. [7] சொல்வான்.

[‘உறுதிமொழிகளை உரைப்பேனென்று தொடங்கினாய். பித்தர் பிதற்றும் பேச்சுப் பேசினாய். எனது பெருவலியைச் சிறுமனிதர் செயிப்பரென்றாய். அவ்வாறுகூறியதற்குக் காரணம் அவர்கள்பால் உனக்குள்ள அச்சமோ? அன்போ? மனிதரை வெல்ல வரம்பெற்றேனில்லை யென்றாய். திசையானைகளைச் செயித்தற்கும் வெள்ளிமலையைத் தூக்குதற்கும் வரம்பெற்றேனோ? மனிதர், எனக்கு வலியாதலின்மை கிடக்க; என்னோடு ஒருவயிற்றிற் பிறந்த உனக்குத்தானும் அவர்கள் வலியாதலுண்டோ? தேவரிடம் பெற்ற வரத்தினால் யான் பலமுடையேனானேனென்றாய். யாவரிடம் பெற்ற வரத்தினால் மூவரை வென்றேன்? நந்திசாபத்தினால், நம்மைக் குரங்குகள் கொல்லுமென்றாய். நமக்கு வந்த சாபங்களுக்கு வரம்புண்டோ? அவைகள் நம்மை என்செய்தன? தேவர் சித்தர் இயக்காதியோருள் யாவர் நமக்குக் கேடுசிந்தியாதவர்? பயத்தால் வெளிப்படையாக வாயாற் சபிக்கமாட்டாமல் மனத்தாற் சபித்தலாக அவர்கள் சிந்தித்த கேடுகள் நம்மை என் செய்தன?



எதிர்த்தார்பலத்திற் பாதிபெறும் வரமுண்மையை யறியாது வாலியை எதிர்த்துத் தோல்வியடைந்தேன். அதனால் சாமானியமான சகலகுரங்குகளும் என்னை வெல்லுமென்று எங்ஙனங் கொண்டாய்? நீ புகழும் அந்த மனிதன், மேற்கூறிய வரத்தை மனத்துட் கொண்டன்றோ மறைந்துநின்று வாலியைக்கொன்றான்!]

7 ஊன வில்லிறுத் தோட்டைமா மரத்துளம் போட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசிழந்[1] துயர்வனங் குறுகி
யானி ழைத்திட[2] வில்லிழந் துயிர்சுமந் திருந்த[3]
மானு டன்வலி நீயலா லாருளர் மதித்தார்.[4]

கொண்டுகூட்டு: ஊன வில் இறுத்து, ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டி, கூனி (இழைத்த) சூழ்ச்சியால் அரசு இழந்து, உயர்வனம் குறுகி, யான் (சூழ்ச்சி) இழைத்திட இல் இழந்து, உயிர்சுமந்திருந்த மானுடன் வலி(யை) நீ அலால் மதித்தார் ஆர் உளர்?

பொருள்: (செத்த பாம்பைக் கொன்றாற்போல, முன்னமே) ஊனமுற்றிருந்த (சொத்தை) வில்லை ஒடித்துப் பொந்தாயிருந்த மரத்துள் அம்பைப் புகுத்துக் கூனி செய்த உபாயத்தினால் இராச்சியத்தை இழந்து, காட்டை அடைந்து, நான் செய்த தந்திரத்தினால் பெண்டாட்டியை இழந்து, (தொலையமாட்டாத) உயிரைச் சுமந்து கொண்டிருக்கும் மனிதனது வலிமையை நீயல்லாமல் மதித்துக் கூறுவார் யாரிருக்கின்றார்?'

ஊனம் - குறைவு; முறிந்திருத்தலைக் குறித்தது. இறுத்தல் - ஒடித்தல். சூழ்ச்சி - உபாயம் - தந்திரம். குறுகுதல் - அடைதல். இழைத்தல் - செய்தல். இல் - மனைவி.

வில்லொடித்தல் அரசிழத்தல் வனமடைதல் தாரமிழத்தல் மாகிய இராமன்செயல்களைந்தை யெடுத்துக்கூறிய இராவணன், அச்செயல்களை நிகழ்ந்தமுறையே காலக்கிரமமாகக் கூறாமல், இராமனைக் குறைவுபடுத்தற்குக் கீர்த்தியானவைகளை முன் உரைத்து, முடிவாக அபகீர்த்தியானவைகளைப் பின் உரைத்தல் ஏற்றதெனக்கொண்டு, அவ்வாறு கீர்த்தியானவைகளை முன்கூறுவதிலும் இழிவுபடுத்திக்கூறுவானாய்,

ஊன வில்இறுத் தோட்டை மாமரத்துள் அம்போட்டி

என்று கூறிப் பின்பு,

> கூனி சூழ்ச்சியால் அரசிழக் துயர்வனம் குறுகி
> யான் இழைத்திட இல்இழக் துயிர்சுமக் திருந்த

என்று கூறினனெனலாம்.

முன் 'கூனி சூழ்ச்சி' என்றதனால் பின் 'யான் சூழ்ச்சி இழைத்திட' எனற்பாலதை 'யான் இழைத்திட' எனச் சுருக்கிச் சொன்னான். 'கூனி (இழைத்த) சூழ்ச்சி' 'யான் (சூழ்ச்சி) இழைத்திட' என, இரண்டாம் அடியில் 'இழைத்த' என்பதையும் மூன்றாம் அடியில் 'சூழ்ச்சி' என்பதையும் வருவித்துப் பொருத்தமாகப் பொருள் உரைத்திருத்தல் காண்க.

பாடபேதம்:—[1] அழிந்து. [2] நினைத்திட. [3] இன்னுயிர்சுமக்கும். [4] மதிப்பார்.

### விபீடணன் மீளவும் கூறுதல்.

[பின்பு, இராவணன் 'போர்க்குப் புறப்படுவோம்' என்றான். விபீடணன், 'முழுத்தனிமுதல்வனே இராமனாக அவதரித்திருக்கின்றான். யான் இவ்வளவு எடுத்துரைத்தபின்னும் அவனை எதிர ஏகுவாய்போலும்' என்றான். இராவணன் 'நீ சொன்ன முதல்வன், யான் இந்திரனைச் சிறையிலிட்டு எட்டுத்திசையானைகளையும் கொம்பை முறித்து என் இச்சைப்படியெல்லாஞ்செய்த இத்தனைகாலமும் என் செய்தான்? மூச்சற்றுக்கிடந்தானா?' என்றுகூறி, 'நீ போருக்கு எங்களுடன் வரவேண்டாம். பகைவர் உன்னிடம் வராமற் பாதுகாக்கும் பலத்த மதில்சூழ்ந்த இந்த நகரத்துக்குள்ளேயே பத்திரமாயிரு. பயப்படாதே! பயப்படாதே!' என்று பக்கத்துள்ளாரைப் பார்த்துக் கைதட்டிச் சிரித்தான். விபீடணன், பின்னும் விடானாய், 'யான் இன்னமுங் கூறவேண்டியதிருக்கிறது. அது இரணியசரிதம். கேட்டருள்வாயாக' என்று கூறுவானானான்.]

இராவணன் மந்திரப்படலம் முற்றியது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# பாஞ்சராத்திரம்.

[உகூo-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

துர்யோதனன்:—தாங்கள் கட்டளையிடுங்கள்; தங்களுக்கு எது விருப்பம்? நான் எதைச் செய்யவேண்டும்?

துரோணர்:—பிள்ளாய்! துரியோதன! பிறகு சொல்வேன்.

துர்யோதனன்:—தாங்கள் எதைக்குறித்து யோசிக்கிறீர்கள்?

> ப்ராணாயிகோऽஸி ஸவதா வ க்ருதோபதேஶ:
> ஶௌர்யேஷு யாதி கணநாம் க்ருதஸாஹஸோऽஸி।
> ஸங்கோச வத கிஞ்சிதஸி கிம் ததாமி
> ஹஸ்தே ஸ்தி தா மம கதா ஸவதஸ்து ஸர்வம்॥

நான் தங்களுக்கு உயிரைக்காட்டிலும் அன்புள்ளவன்; தங்களால் உபதேசம் செய்யப்பெற்றவன்; மகாசூரர்களில் நானும் ஒருவனாக எண்ணப்பெற்றிருக்கிறேன்; நான் விடாப்பிடியாக நற்காரியங்களை நிறைவேற்றியவன்; தங்களுடைய விருப்பத்தைக் கூச்சமில்லாமல் அறிவிக்கவேண்டுகிறேன்; தங்களுக்கு வேண்டிய பொருள் யாது? நான் எதைக்கொடுக்கவேண்டும்? என் கையில் கதை இருக்கிறது; (அந்த ஆயுதத்தால் நான் ஆயுட்காலமுழுவதும் வாழ்வேன்;) ஆதலால் என்னுடைய பொருள் முழுவதும் தங்களுடையதே.

துரோணர்:—நான் சொல்லத்தொடங்கும்போது கண்ணீர்ப் பெருக்கானது என்னைத் தடுக்கிறது.

எல்லோரும்:—ஏன் ஆசாரியர்கூடக் கண்ணீர்விடுகிறார்?

பீஷ்மர்:—பேரப்பிள்ளாய்!, உன்முயற்சி வீணே.

துர்யோதனன்:—யாரடா அங்கே!

வேலையாள்:—[அரங்கம் நுழைந்து] மகாராஜா மேன்மையுடன் வாழவேண்டும்.

துர்யோதனன்:—நீர் கொணர்வாயாக.

வேலையாள்:—மகாராஜா! உத்திரவுப்படி. [வெளியேறித் திரும்பிச் சென்று] மகாராஜா! மேன்மையுடன் வாழவேண்டும். இதோ நீர்.

துர்யோதனன்:—கொண்டுவா. [என்று குடத்தைக் கையிலேந்தித் துரோணரைநோக்கி] ஆசாரியரே! கண்ணீர்விட்ட திருமுகத்தைச் சுத்தஞ்செய்துகொள்வீராக.

துரோணர்:—இருக்கட்டும், இருக்கட்டும். எனது கார்யத்தைச் செய்வதே முகத்துக்குத் தண்ணீராகும்.

துர்யோதனன்:—ஆ! சீ!

யதி விப்ரியமஸ்மாபிர்ஜிஹ்மதாம்கதை
யதி ச ஸம்ஶயோ ந தாஸ்யதீதி।
ஶரஶத கடிநம் ப்ரயஜ்ஞ ஹஸ்தம்
ஸலிலமிதம் காரணம் ப்ரதிக்ருஹாண॥

நான் முன் செய்துள்ள கெட்டசெயல்களை நினைத்துக் கொண்டு, ஒருகால் இவன் கொடுக்கமாட்டான் என்று நிச்சயம் செய்வீர்களானால், யாகங்களில் தெர்ப்பைப் புற்கள் அழுத்தியதால் கடினமாயிருக்கிறதான (தங்களுடைய) திருக்கையை நீட்டுங்கள். தானகாலத்தில் மிகவும் உபயோகப்படுவதாயும், கொடையை உறுதிசெய்வதாயுமுள்ள தீர்த்தத்தை (த் தங்களுடைய கையில்) வார்க்கிறேன்.

துரோணர்:—நல்லது என் மனத்தில் நம்பிக்கை உண்டானது; பிள்ளாய்! கேட்பாயாக.

யேஷாம் கதிர்க்வாபி நிராஶ்ரயாணாம்
ஸம்வத்ஸரைர்த்வாதஶபிர்ந த்ருஷ்டா।
த்வம் பாண்டவானாம் குரு ஸம்விபாகம்
ஸைஷா ச பிக்ஷா மம தக்ஷிணா ச॥



(யாதொரு) ஆதரவுமில்லாமல் திரிகிறவர்களான எவர்களுடையநிலைமை பன்னிரண்டாண்டுகளாக இன்னதென்று காணப்படவில்லையோ, அந்தப் பாண்டவர்களுக்கு நாட்டின் பகுதியை நீ கொடுப்பாயாக; இதுதான் எனக்கு நீ கொடுக்கத் தக்க தக்கிணையும் என்னுடைய வேண்டுகோளுமாம்.

சகுனி:—[பரபரப்புடன்] ஓ! அப்படியன்று.

உபாத்யாயஸ்ய ஶிஷ்யஸ்ய விஶ்வஸ்தஸ்ய ச கௌரவே।
யஜ்ஞப்ரஸ்தாவதாநாத்யம் பாபிஷ்டம் யச்ச வஞ்சநா॥

ஆசாரியரிடத்தில் கௌரவமிகுதியால் வாக்களித்தவனை சிஷ்யனிடம், வேள்வியின்பிரஸ்தாவத்தைமுன்னிட்டு, இவ்விதம் தர்மவஞ்சனைசெய்வது தங்களுக்குத் தகுதிதானே?

துரோணர்:—தர்மவஞ்சனை என்பது எவ்வாறு? ஓ! காந்தார ராஜ்யம் கிடைத்ததால் கர்வங்கொண்ட சகுனியே! உன்னுடைய கொடிய சுபாவத்தால் உலகமெல்லாம் தீயதென்று கருதுகிறாய்போலும். அடடா!

ஜ்ஞாதீனாம் பைத்ருகம் ராஜ்யம்
தீயதாமிதி வஞ்சநா।
கிம்வரம் யாசிதே தத்தம்
பலாத்காரேண தத்ஹ்ருதம்॥

பரம்பரையாக வந்த தாயத்தார்களுக்குரிய நாட்டை அவர்களிடம் ஒப்புவிக்கும்படி உபதேசித்தல் தர்மவஞ்சனை ஆகுமா? (பாண்டவர்கள்) வேண்டக் கொடுத்தல் நல்லதா? அல்லது அவர்கள் நாட்டை வலிந்துகைப்பற்றிக்கொள்வது மேன்மையா? (நீயே சொல்வாய்.)

எல்லோரும்:—வலிந்துகொள்வது என்பது எப்படி?

பீஷ்மர்:—பேர! துர்யோதன! இப்பொழுது அவப்ருதஸ்நானம்செய்திருக்கிறாய். (இது சூதாட்டமன்று.) நண்பனிடம் பொய் வார்த்தை பேசி, உண்மையில் எதிரியாயிருக்கிற சகுனியின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதே. பேரனே! பார்ப்பாயாக.

यत्पाण्डवा द्रुपदराजसुतासहायाः
कान्ताररेणुपरुषाः पृथिवीं भ्रमन्ति।
यत्त्वं च तेषु विकृतस्त्वयि ते च वैरं
सर्वं तदेव शकुनेः परुषावलेपः॥

துருபதராஜன்புதல்வி (துரோபதை)யுடன்கூடப் பாண்டவர்கள் கானகத்தின் புழுதியால் அழுக்கடைந்தமேனியுடன் இப்பூமி முழுவதும் சுற்றித்திரிதலும், அவர்களுக்கு, நீ தீங்கிழைத்தலும், உன்னிடம் அவர்கள் விரோதம் வைத்தலும் ஆகிய இவையெல்லாம், சகுனியின் கர்வத்தாலேற்பட்டவையே.

துர்யோதனன்:—இருக்கட்டும்; ஆசார்யரே! இதை வினவுகிறேன்.

துரோணர்:—பிள்ளாய்! சொல்வாயாக.

துர்யோதனன்:—பாண்டவர்களிடம் வலிந்துகொள்ளும் ஆற்றலிருக்குமானால், சபைநடுவில் நாட்டைத்தோற்று (மனைவியை மானபங்கம்செய்ததால்) அவமானமும் செய்யப்பட்டிருக்கும் நிலைமையில் ஏன் அவர்கள் அவ்வலிமையைக் காட்டவில்லை?.

துரோணர்:—இவ்விஷயத்தைக்குறித்து (ச்சூதாட்டமான அதர்மத்தைத்) தர்மமென்று நினைத்திருந்த யுதிஷ்டிரனைக்கேட்கவேண்டும்.

येन भीमः सभास्तम्भं दोलयन्नेव वारितः।
यद्येकस्मिन् विमुक्तः स्यात्क्वास्मिन् शकुनिराक्षिपेत्॥

(உங்களைத் தொலைப்பதற்காக) மண்டபத்தின் இந்தத் தூண் தகுந்ததா? அல்லது அந்தத் தூண் தகுதியுள்ளதா? என்று பீமன் அசைத்துப்பார்க்கும்போது, யுதிஷ்டிரன் தடுக்காமலிருந்திருந்தால், இப்பொழுது சகுனி நம்மை ஆக்ஷேபித்து எதிர்வாதம் செய்வானா? (அவன் தடுக்காமலிருந்தால் பீமன் உங்கள் யாவரையும் அப்பொழுதே கொன்றிருப்பான்.)

பீஷ்மர்:—ஏதோ தொடங்கி எதிலேயோ முடிந்தது. ஆசார்யரே! இப்பொழுது காரியம் பெரிது. கலகம் வேண்டா.



துரோணர்:—இவ்விஷயத்திற் கெஞ்சுதல் வேண்டா. கலகமே நடக்கட்டும்.

பீஷ்மர்:—ஆசாரியரே! தயவுசெய்யவேண்டும். பேரனே! பார்ப்பாயாக.

ये दुर्बलाश्च कृपणाश्च निराश्रयाश्च
त्वत्तश्च साम श्रयन्ति न दर्पयन्ति।
ज्येष्ठो भवान् प्रणयिनस्त्वयि ते कुटुम्बे
तान् पालयिष्यसि मृगैः सह वर्तयन्तु॥

எவர்கள் வலியில்லாதவர்களாயும், தாழ்ந்தவர்களாயும், புகலற்றவர்களாயும், இருந்து உன்னிடம் சமாதானத்தை விரும்புகிறார்களோ, கர்வம்கொள்ளவில்லையோ, அவர்களைக் கவனிப்பாயாக; நீயோ, குடும்பத்தில் பெரியோன்; சிறுவர்களான அவர்கள் உன்னையே நம்பியிருக்கிறார்கள்; அவர்களை நீ காப்பாற்றுவாயா? அல்லது, அவர்கள் வாழ்நாள்முழுவதும் கானகத்தில் மிருகங்களுடன் காலங்கழிக்கட்டுமா?

சகுனி:—(கானகத்திலேயே) காலங்கழிக்கட்டும்; காலங்கழிக்கட்டும்.

கர்ணன்:—ஓ! ஆசார்யரே! கோபங்கொள்ளற்க. துரியோதனனேவெனில்,

हितमपि परुषयुक्तं द्वेष्टि श्राव्यमाणो
परपौरुषविशेषं नेच्छति स्तूयमानम्।
मतिविवशमनन्तं रक्ष्यतां शिष्यकायं
गज इव बहुदोषो ह्यङ्कुशेनैव वाह्यः॥

வன்மொழிகளாற் சொல்லப்பட்டால் இதமான விஷயத்தையும் கவனியான்; செவியிலுரைத்தாற் சினம்கொள்வான்; மற்றவர்களின் நற்குணங்களைப் பொறுக்கமாட்டான்;

இதுவரை நடந்தது நடந்துவிட்டது; சீடர்களின்காரியத்தைத் தாங்கள் கவனிக்கவேண்டும்; துர்யோதனன் கோபம் பொறாமை முதலிய பல தோஷங்கள் நிரம்பியவன்; நல்வார்த்தைகளைக் கொண்டு யானையை அடக்குவதுபோல், அவனை மென்மொழிகளால் நல்வழிப்படுத்தவேண்டும்.

துரோணர்:—குழந்தாய்! கர்ண! பிராம்மணத்தன்மை மிகவும் ஒளியுடன்கூடினது; நல்லசமயத்தில் நினைவூட்டப்பெற்றேன். நான் உன்மனப்படி நடப்பேன். பிள்ளாய்! துர்யோதன! நான் உனக்கு ஆணையிடத்தகுந்தவனில்லையா?

பீஷ்மர்:—இப்பொழுதுதான் இவர் வழியாகச்சொல்லத் தொடங்கினர். இறுமாப்புக்கொண்டவர்களுக்கு நன்மொழிகளே மருந்தாகும்.

துர்யோதனன்:—(ஆசார்யரே!) தாங்கள் எனக்குமட்டுமன்றி, என்குலத்துக்கே பிரபுவாக விளங்குகிறீர்கள்.

துரோணர்:—இவ்வாறு ஆசார்யபக்தி மிகுந்து பேசுதல் உனக்கே தகும். ஆதலால், பிள்ளாய்!

> த்வம்வத்ஸ யதி ரோஷ தவாத்ர தோஷ
> ஸ்தாம் வீடயாமி யதி வாஸ்ய தவைவ ஹாஸ:।
> தோஷா: பரஸ்பரக்ருதாஹி குலோத்கதாநாம்
> யத்ராயிகாரவசநைஷு ஸமீபவந்தி॥

என்னால் நீ மோசஞ்செய்யப்பட்டால், அது உன்னுடைய பிழையன்று; நான் உன்னைக் கட்டாயப்படுத்தினாலும், அதனால் உனக்கு லாபமே. நற்குடிப்பிறந்தோர்களின் பரஸ்பரவிரோதங்கள், ஆசார்யரின்வார்த்தைகளால், முழுதும் தீர்ந்துவிடுமன்றோ?

துர்யோதனன்:—அதைப்பற்றி ஆலோசிக்கவிரும்புகிறேன்.

துரோணர்:—எவனுடன் யோசனைசெய்யவிரும்புகிறாய்?

> பீஷ்மேண கர்ணேந க்ருபேண கேந
> கிம் ஸிந்துராஜேந ஜயத்ரதேந।
> கிம் த்ரௌணிநாஹோ விதுரேண ஸார்த்தம்
> பித்ரா ஸமாத்ரா வத வத்ஸ! கேந॥



பீஷ்மருடனா? கர்ணனுடனா? ஸிந்துராஜனான ஜயத்திரதனுடனா? அசுவத்தாமனுடனா? விதுரருடனா? தந்தையுடனா? அல்லது உன் தாயுடனா? குழந்தாய்! யாருடன் யோசனைசெய்யப் போகிறாய்; சொல்.

துர்யோதனன்:—இல்லை; இல்லை; மாமாவுடன்.

துரோணர்:—சகுனியுடனா? கார்யம் கெட்டுவிட்டது.

துர்யோதனன்:—மாமா! இங்கே வாரும். தோழ! கர்ண! இங்கே வா.

துரோணர்:—[தன்மனதுக்குள்] இருக்கட்டும்; இவ்விதம் செய்வேன். [வெளிப்படையாக] குழந்தாய்! காந்தார அரசனே! இங்கேவா.

சகுனி:—இதோ இருக்கிறேன்.

துரோணர்:—குழந்தாய்!

> க்ரோதப்ராயம் வயோஜீர்ணம் க்ஷந்தவ்யம் பாலவத்மம।
> ஸ்வஸ்ய ரோக்ஷஸ்ய வசஸ: பரிஷ்வங்க: ப்ரதிக்ரியா॥

என்னுடைய வயதோ ஜீர்ணமானது; குழந்தைகள்போல் எனக்குக் கோபம் உண்டாகக்கூடியதே; (உன்னைப்)பிரியத்துடன் ஆலிங்கனம்செய்துகொள்வதே என்னுடைய கோபவசனத்துக்குத் தகுந்த சமாதானமாகும்.

பீஷ்மர்:—(தனக்குள்)

> ஏஷ ஶிஷ்யஸ்ய வாத்ஸல்யாத் ஶகுநிம் யாசதே குரு:।
> ஏவம் ஸாந்த்வ்யமாநோऽபி நைவ க்ரூரம் வதி ஜிஹ்மதாம்॥

இவர், சிஷ்யனிடம் வைத்திருக்கும் வாத்ஸல்யத்தால் சகுனியிடம் யாசிக்கிறார்; இவ்விதம் சமாதானப்படுத்தப்பட்டாலும், இவன் கொடியசுபாவத்தை விடப்போவதில்லை.

சகுனி:—[தனக்குள்] ஆசார்யர் துஷ்டர்; தன்காரியம் நிறைவேறவேண்டுமென்று என்னைச் சமாதானம்செய்கிறார்.

[எல்லோரும் சற்று நடந்து உட்காருதல்]

துர்யோதனன்:—மாமா! பாண்டவர்களுக்குப் பாதிராஜ்யம் கொடுப்பதைப்பற்றி உம்முடைய தீர்மானம் என்ன?

சகுனி:—கொடுக்கக்கூடாதென்பதே என் முடிவு.

துர்யோதனன்:—மாமா! கொடுக்கவேண்டுமென்று சொல்ல வேண்டும்.

சகுனி:—ராஜ்யத்தைக் கொடுக்கவேண்டுமானால், என்னுடன் ஏன் யோசிக்கிறாய்? வேண்டுமானால் ராஜ்யம் முழுமையுமே கொடுக்கலாம்.

துர்யோதனன்:—தோழ! அங்கராஜனே! நீ ஒன்றும் சொல்லவில்லையே.

கர்ணன்:—இப்பொழுது என்னசொல்வேன்?

ராமேண பு⁴க்தாம் பரிபாலிதாம் ச
ஸௌப்⁴ராத்ரதாம் ந ப்ரதிஷேத⁴யாமி।
க்ஷமாக்ஷமத்வே து ப⁴வாந் ப்ரமாணம்
ஸங்க்³ராமகாலேஷு வயம் ஸஹாயா:॥

ஏனெனில், இராமனால் அனுபவிக்கப்பட்டதும், காக்கப்பட்டதுமான உடன்பிறந்தாரொற்றுமையை, நான் ஆக்ஷேபிக்கவில்லை; (பாண்டவர்களுக்கு ராஜ்யத்தில் பாதியைக் கொடுப்பதற்கு நான் ஒருமுயற்சியும் செய்யாவிட்டாலும், அதற்குத் தடை ஒன்றும் செய்யேன்;) அவர்களுக்கு ராஜ்யம்கொடுப்பது சரியா? அன்று? என்று தாங்களே தீர்மானஞ்செய்யவேண்டும்; (பாண்டவர்களுடன்) போர்நிகழும்போது நாங்கள் (தங்களுக்கு) உதவி புரிவோம்.

[தொடரும்.]

V S ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.

ஸ்ரீ:

# தமிழ்வழக்கு.

தமிழ்வழக்கு என்பது இங்கு, தமிழாகிய வழக்கு என விரியும். வழக்கு எனினும் பாஷை எனினும் ஒக்கும். அது ஒருவன் கருதியபொருளை அறிவுறுக்கும் சொற்றொடர்களின் நிகழ்ச்சியாம். சொற்பொருளொற்றுமைநயத்தால், பொருட்டொடர்நிகழ்ச்சியும் வழக்கெனப்படும். தமிழாகிய சொற்றொடர்களின் நிகழ்ச்சியை (தமிழ்ப்பாஷையை) ஆராய்தலால் இதற்குத் தமிழ்வழக்கு எனப் பெயர்கொடுக்கப்பட்டது.

தமிழ்வழக்கு, உலகவழக்கு செய்யுள்வழக்கு என இருவகைப்படும். உலகவழக்கு - லௌகிகபாஷை. செய்யுள்வழக்கு - காவ்யபாஷை.

உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் அவ்விருவகைவழக்கையும் *முதற்பொருளாகவும், அவ்விருவகைவழக்கிற்கும் †உறுப்பாயுள்ள எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றை அம்முதற்பொருள்களின் சினைப்பொருள்களாகவும் கொண்டு இலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன.

இக்கருத்து, தொல்காப்பியப் பாயிரத்துள், "வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்று பனம்பாரனாரால் வெளியிடப்பட்டது.

இதன்பொருள்: 'உலகவழக்கு செய்யுள்வழக்கு என்னும் அவ்விரண்டு முதற்பொருள்களுக்குமுரிய சினைப்பொருள்களாகிய எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றின் இலக்கணங்களைச் சொல்லவிரும்பி' என்பதாம்.

---

* முதற்பொருளாவது: பலசினை (கிளை) களடங்கிய பிண்டமாம். அது பல உறுப்புக்களடங்கிய உடல்போல்வது.

† உறுப்பு எனினும் சினை எனினும் அங்கம் எனினும் ஒக்கும்.

இதனுள், உலகவழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் *நாமைகதேசக்கிரகணம் என்னும் நியாயத்தாற் சுருக்கிச்சொல்லலாயிற்று.

"ஆயிருமுதல்" என அகரச்சுட்டு நீண்டுநின்றது; அவ்விரு முதல் என்றபடி. வழக்கும் செய்யுளுமாயுள்ள அவ்விரண்டினையும் 'முதல்' என்றமையால், அவற்றின் உறுப்பாயுள்ள எழுத்தும் சொல்லும் பொருளும் அம் முதற்பொருளின் இயைபிறிதாகிய சினை எனப் பொருள்கொள்ளக்கிடக்கின்றன.†

சொற்றொடர்நிகழ்ச்சியால் ஒலிவடிவான பாஷைக்கு எழுத்தும் சொல்லும் ஒலிவடிவால் ஒற்றுமையுடைமையால் அவை அகத்துறுப்பாகிய சினையேயாம்; அவை, ஒருவனுக்குக் கை கால் விரல் உகிர் முதலியனபோல அங்கமாகவும் உபாங்கமாகவும் ஏற்ற பெற்றி கொள்ளக்கிடக்கும்.

பொருள் ஒன்றுமட்டும் ஒலிவடிவான சொற்றொடரின் வேறாயிருத்தலாற் புறத்துறுப்பாகிய சினையாம்; அது ஒருவனுக்கு ஆடை அணிகலன்கள் போல்வது.

இவ்வாறு ஒருபொருளுக்கு இருவகையுறுப்புக்கள் உண்டு என்பதை, 'புறத்துறுப்பெல்லாம் எவன் செய்யும் யாக்கை-யகத்துறுப் பன்பி லவர்க்கு' என்பதனாலும் அறியலாம்.

---

* நாமைகதேசக்கிரகணமாவது: ஒருபொருளுக்குரிய முழுப்பெயரின் ஏகதேசமாகிய ஒருபகுதியைக்கொண்டு அப்பொருளை வழங்குவது. அது—நரசிங்கப்பிரானைச் சிங்கப்பிரான் எனவும், வீமசேனனை வீமன் எனவும் வழங்குதல்போல இங்கு உலகவழக்கை வழக்கு என்றும், செய்யுள்வழக்கைச் செய்யுள் என்றும் அப்பெயர்களின் நிலைமொழி வருமொழிகளுள் ஒன்று கொண்டு வழங்கியிருப்பது.

† இப்பாயிரப்பகுதிக்கு இவ்வாறு பொருள்கொள்ளாத பிறரெல்லாம் வேறுவேறு பொருளுரைத்து இடர்ப்படுப.



ஆகவே, பாஷையாகிய சொற்றொடர்நிகழ்ச்சிக்கு எழுத்தொலியும் சொல்லொலியும் அகத்துறுப்பாகிய சினையாகவும் அச்சொற்றொடரொலிகளால் உணர்த்தப்படும் பொருள் புறத்துறுப்பாகிய சினையாகவும் கொள்ளப்பட்டு அவற்றின் இலக்கணங்கள் தொல்காப்பியனாரால் ஆராய்ந்து உரைக்கப்பட்டன என்பதாம்.

உலகவழக்கிற்கும் செய்யுள்வழக்கிற்கும் உரிய எழுத்திலக்கணங்கள் எழுத்ததிகாரத்தாலும், அவற்றிற்குரிய சொல்லிலக்கணங்கள் சொல்லதிகாரத்தாலும் ஒருங்கு உரைக்கப்பட்டன; அவற்றுள் உலகவழக்கிலக்கணங்களே பெரும்பான்மையாகவும் செய்யுள்வழக்கிலக்கணங்கள் சிறுபான்மையாகவும் உள்ளன.

உலகவழக்கிற்குரிய பொருள்களெல்லாம் கற்றுணரவேண்டாது உலகியலறிவாலே பட்டாங்குணர்த்தும் சொல்லுணர்ச்சிகொண்டே தெள்ளிதின் அறியக்கிடத்தலால் அவற்றை இலக்கணங்கூறியுணர்த்தாதுவிடுத்துச் செய்யுட்குரிய பொருளிலக்கணங்கள், நாடகவழக்கும் உலகியல்வழக்கும் விரவிய புலனெறி வழக்கிற்குரியவாய் நூலறிவானன்றி உலகியலறிவால் அறிதற்கரியனவாயிருத்தலால் அவையே பெரும்பாலும் பொருளதிகாரத்தாற் சொல்லப்பட்டன.

அவற்றுள், அகத்திணையியல் புறத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என்னும் இவற்றால் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இருவகைப்பொருள்பற்றிநிகழும் செய்யுள் வழக்கிற்குரிய பொருளிலக்கணங்கள் வரையறுக்கப்பட்டன. இவை செய்யுள்வழக்கிற்குப் புறத்துறுப்பாகிய அங்கங்களாம்.

செய்யுளியலால் அப்பொருள்பற்றிநிகழும் செய்யுட்பகுதிகளெல்லாம் வரையறுக்கப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் உரைக்கப்பட்டன. இவை செய்யுள்வழக்கிற்கு அங்கமாகிய பொருளின்வாயிலாக உபாங்கங்களாம். இவ் அங்கோபாங்கங்கள் சினையின்பாற்பட்டன.

உவமவியல் மெய்ப்பாட்டியல்களிரண்டும் இருவகைவ்ழக்கிற்கும் பொதுவாய் அப்பொருள்பற்றிநிகழும் தோற்றம், சுவை முதலிய காட்சிக்கும் கருத்துக்கும் இலக்காகும் அப்பொருள்களின் இயல்புகளைப் புலப்படுத்தலால் அவை அப்பொருள்களின்வாயிலாக இருவகைவழக்கிற்கும் உபாங்கமாகிய சினைப்பொருள்களாம்.

மரபியலால் அவ்விருவகைவழக்கினும் வழங்கற்குரிய பொருட்பெயர் முதலான பலவகை இலக்கணங்களும் அவ்வம் மரபுபற்றியுரைக்கப்பட்டமையால் அவை அப்பொருளின் புறத்துறுப்பாகி உபாங்கம் என்னும் சினைப்பொருளாயின.

இங்ஙனம் உலகவழக்கும் செய்யுள்வழக்குமாகிய தமிழ்ப் பாஷைக்குரிய எழுத்து சொல் பொருள் என்னும் சினைப்பொருள்களைச் சாங்கோபாங்கம் ஆராய்தலால் தொல்காப்பியம் வழக்குநூல் என்னும் பாஷாசாஸ்திரமாயிற்று.

இதனுட் சொல்லப்படும் களவு, கற்பு முதலிய பலவகை ஒழுக்கங்களும் பொருளின்பாற்படும்; அப்பொருள்பற்றிவ்ரும் கூற்று, கிளவி, துறை எனப் பெயர்பெறும் சொற்றொடர்களெல்லாம் செய்யுள்வழக்காகிய காவ்யபாஷை யெனப்படும்.

இவ்வாற்றான் உலகவழக்கும் செய்யுள்வழக்கும் வகுத்துரைக்கும் தொல்காப்பியத்துக்கு வழக்குநூல் என்பது நுவல்பொருள் பற்றியபெயராயிற்று.

இங்ஙனங்கொள்ளுதலால் தொல்காப்பியம், வழக்கு (பாஷை) என்னும் ஒருபொருணுதலிவரும் மூன்றுறுப்படக்கிய பிண்டமாய் ஒருநூலாயிற்று.

இங்ஙனங் கூறியவாற்றால் தமிழ்வழக்கிற்குரிய பிரமாணம் தொல்காப்பியம் என்பதும், பாஷைக்கு வழக்கு என ஒருபொதுப் பெயர் உண்டென்பதும் நிரூபிக்கலாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

ஸ்ரீ:

# புல்லையந்தாதி.

[உஎச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

56 துதித்தி டார்புல்லை மாறிரு வடிகளிற்
றெண்டுபட் டாளாகி
மதித்தி டாரகி லேசனைத் தொழுதிடார்
வலம்புரிந் திடமாட்டார்
கதித்த சக்கர தீர்த்தத்திற் படிந்திடார்
கடல்படிந் திடமாட்டார்
கொதித்த வெஞ்சினக் காலன்வந் தாலிந்தக்
குறும்பரென் செய்வாரே.

57 செய்ய பங்கயத் தவிசினின் மருவிய
திருமகள் மணவாளா
பைய ராவினில் விழிதுயில் புல்லையம்
பதிவளர் பெருமானே
வைய மீரெழு புவனமு முந்தியில்
வைத்தகி ருபையாளா
வைய நின்னடி யார்க்கடி யேனென்ற
ஞபத்தைக் காத்தாயே.

58 தாய ரெத்தனை தந்தைய ரெத்தனை
தாரங்க டமரானோர்
சேய ரெத்தனை யெத்தனை சென்மமென்
சென்னத்தைத் தொகைகாணுத்
தீய னிப்பிறப் பினில்வந்து புல்லையைத்
தெரிசித்த நலத்தாலே
தூய னத்தனி மாலென்றன் பிறவியைத்
துடைத்தெனை யாண்டானே.

59 ஆண்ட பண்டப தார்த்தம்பெண் டீர்மக்க
ளரும்பொருள் கிளைஞோர்கள்
பூண்ட பூணிவை தேகம்விட் டொழியுமப்
போதங்குத் துணையாமோ
பாண்ட வர்க்கொரு தூதரைப் புல்லையம்
பதியரைக் கதியாக
மூண்ட ழைக்குமுன் னுபத்து வேளைக்கு
முன்னின்று காப்பாரே.

60 பாரெ லாம்படைத் தாண்டழித் தென்றுமிப்
படிக்குமுத் தொழிலாகுஞ்
சீரெ லாஞ்செயு மூவடி வாய்நின்ற
சின்மயப் பொருணீயே
வீர ராகவ ராகிமுன் னிலங்கையில்
வேந்தனைச் சினந்தோய்சொ
லார ணுவருள் வாய்புல்லை யாய்நம்ப
மடியவர்க் கெளியானே.

வேறு.

61 அடிய வர்க்கெளி யார்புல்லை யம்பதி
குடிகொ ளுத்தம ளூர்களி கூர்ந்திடும்
வடிவு பெற்றபற் பாதன வல்லியைப்
படியி னிற்படி யார்மரப் பாவையே.

62 பாவை யர்க்கர சான பழம்பொரு
டேவை யற்புத மாலைத் தினம்புணர்
பூவை யைத்திருப் புல்லையிற் பொன்னியைச்
சேவை பெற்றிடத் தீவினை யில்லையே.

63 இல்லை யில்லை யெனுமி லிகபரத்
தொல்லை நீக்கித் துணைசெய்கு வாடிருப்
புல்லை நாயகி பூவடி போற்றினுற்
…ல்லை யாளவுஞ் செய்வள் கதிக்கவே.



64 கதித்தன் மேவு கடற்கரைப் புல்லையம்
பதித்த லம்புகல் பன்மணிக் கோயிலை
மதித்த லம்புயத் தாளை வணங்குதல்
துதித்த லம்புவித் தூயவர் செய்கையே.

65 செய்கை யாலுந் திறங்களி னுலின?
வைகை பாயும் வளமுள சக்கரப்
பொய்கை சூழ்திருப் புல்லையி னுயகி
கைகை மேற்பலன் காட்டித் தருவளே.

66 தருவ னந்தனை யாள்வர்க டண்மலர்
மருவ னந்தனை யூர்மன்ன னுகிய
பருவ னந்தனைச் சேர்புல்லைப் பைங்கிளி
திருவ னந்தலைச் சேவித்த பேர்களே.

67 பேரி லங்கும் பெரியவள் புல்லைமால்
பாரி யங்கம் பருமுலைச் சிற்றிடைத்
தூரி யங்கொ டெழுதவொண் ணுத்துய்ய
நாரி யெங்க ணயனத் திருப்பளே.

68 திருப்புல் லாணித் திருமகள் சீரடி
விருப்பு ளோர்கள் வினைதவிர்த் தேயென்று
நெருப்பி னீர்விண்ணின் மாருதத் தால்வருங்
கருப்பு காமற் கதிகொடுத் தாள்வளே.

69 ஆள வந்தவள் புல்லையி னுயகி
தாள லர்ந்த சரோருகந் தன்னிலே
நாள டங்கலு நண்ணித்தொ ழாய்நெஞ்சே
கோள டங்கும்வெங் கூற்றும டங்குமே.

70 அடங்க லாரை யடக்கு மிராகவர்
திடங்கொள் மார்புறை செவ்விதழ்த் தேன்மொழி
மடங்க லாதன வல்லிநன் புல்லையி
னடங்தொ டேவியை நண்ணித் துதிசெய்வாம்.

வேறு.

71 துதிசெ யத்திரு மகிமை பெற்றிடு
துன்ப மாற்றிடு புல்லையி
னதிச யத்தினை யயனு ரைக்கவு
மரனு ரைக்கவும் வல்லரோ
கதிகொ டுத்துள மதிம யக்குறு
கசட றுத்திக முள்ளநா
ணிதிகொ டுத்திடு முனைவ ளர்த்திடு
நிதநி னைத்திடு நெஞ்சமே.

72 நெஞ்ச கத்தினி லேபு லைத்தொழி
னித்மு முற்றகொ டூரியாம்
வஞ்ச க்கொடி யேனி டத்துளம்
வைத்தெந் நாளருள் வாய்கொலோ
பஞ்ச கத்தவி யங்க ளைச்செய்
பாரப ராவளர் புல்லைமேல்
விஞ்ச கக்குரு வேவி ணாடரை
யுய்ய வைத்தரு ளையனே.

73 ஐய நின்னடி யார டிப்பொடி
யாகு மேழையன் மீதிலே
கைய மர்த்தியுன் னிருவி ழிக்கடை
கனிகொண் மெய்க்ருபை செய்குவாய்
வைய முற்று மளித்த ழித்து
வளர்க்கு முத்தொழில் வல்லவா
செய்ய பற்பமின் மேவு மச்சுத
சீர்புல் லாணியின் மாயனே.

74 மாய னேதிரு மங்கை மேவு
மணாள னேயரு ளாளனே
தாய ராகி யனந்த கோடி
சராச ரங்கள் புரந்தவா



நீய லாதெனை யார்பு ரப்பவர்
நித்த னேயருள் வைத்திடாய்
ஆய னேயுனை நம்பி னேன்றென்
றிருப்புல் லாணி யனாதியே.

75 ஆதி யந்தமி லாத ரும்பொரு
ளாகி யன்ப ருளந்தொ றுஞ்
சோதி யந்தரி யாமி யாய்வளர்
துய்ய புல்லையி னையமுன்
காதி மைந்தர்பின் னேக டந்தொரு
கல்லை மெல்லி யெனச்செய் தாட்
போதி லன்புள பேர்கள் விஞ்சுத
போத னம்பெறு போதரே.

76 போத னண்டர் பிரான்வ ணங்கிய
புல்லை யம்பதி வல்லவன்
பாத நம்பெளி யார்த மக்கொரு
பாவ மில்லைய தன்றியும்
மாத னம்பெறு வாரி கத்தினின்
மண்ட லாதிப ராகுவார்
காத னந்த வமரர் நாடிவர்
காணி யாக நிலைப்பரே.

77 நிலைப்பி லாதப வத்தை விட்டு
நிவிர்த்தி செய்யு மிகத்திலே
மலைப்பி லாம னமக்கு நாலிரு
மைந்தர் தந்திடு நெஞ்சமே
யலைக்க டற்கரை மேவு புல்லையி
லரசு நீழ லமர்ந்துவாழ்
சிலைக்கை மாரு ர மேவு மாமகள்
சீர டித்துணை யானதே.

78 ஆன னங்குளிர் பூர்ண சந்திர
ஞனை மத்தக மாமுலை
தேன மர்ந்தசொன் னூலி டைக்கொடி
செவ்வி தழ்த்திரு மாதினைத்
தானி னைந்துபுல் லாணி யூடு
தனித்தி ருப்பவர் போலவே
மோன மந்திர ஞான ரிப்படி
முற்றி னுங்கிடை யாததே.

79 யாத னைப்பட வேயெ திர்த்திடு
யானை மத்தக மாகிய
மாதர் குத்து முலைக்கு ளேயவர்
மைக்கண் வீசு வலைக்குளே
தோத கத்தியர் லீலை யானதி
லேசு மூன்று விடாதெனை
யாத ரித்திடு வாய்பு லாணி
யமர்ந்த சக்கர பாணியே.

80 பாணி யுற்றிடு பொய்கை யூடு
படிந்து கற்படி யேறுவோர்
ஏணி வைத்துவை குந்த லோக
மிகத்தி லேறவும் வல்லரே
நீணி லத்திது சக்க ரத்தட
மென்று நெஞ்சு ணினைந்துபுல்
லாணி யைத்துதி செய்த பேர்திரு
வண்ணல் வண்ணமு மாவரே.

[தொடரும்.]

வித்வான். ரெ. இராமையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
சௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.



# யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை, B.A., (LOND.) அவர்கள்.]

(உ௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## உண்ணாட்டுக்கலகங்கள்.

கி. மு. 404ல் இரண்டாம்டேரியஸ் இறந்தான். அவன்மகன் ஆட்டசாச்சிஸ் அரசனானன். டேரியஸினுடைய இளையகுமாரனான சைரஸ் என்பான் தன் தமயனோடு கலகப்பட்டு ஸ்பாட்டாதேசத்திற் கூலிப்படையினைச் சேர்த்தான். சரித்திர ஆசிரியன் சனபன் என்பான் அப்படைவீரருள் ஒருவன். சனபன் இப்படையின் வரலாற்றைக் கூறினன். 401ல் 100,000 வீரரோடு சைரஸ் புறப்பட்டான். இடைவழியிற் கூலிப்படை பகைப்படையாக மாறிற்று. பின்னர் அது யூபிறிற்றிஸ் நதியையடைந்தது. குனச்சாக்களத்தில் நடந்த போரில் சைரஸ் தோல்வியடைந்தான். கிரேக்கப்படை வீடு திரும்பிற்று. பார்சியர் இடையிடை தாக்கினாராக, வீரர் சனபனைத் தலைவனாக்கினார்கள். படைவீரர் கருங்கடலை அண்டினர். சனபன் ஏதென்ஸ்நகரிற் சென்று தன் குரு சோக்கிறிற்றிஸ் என்பவருக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்தான். சோக்கிறிற்றிஸ் 469ல் பிறந்தார். அவரது தொழில் சிற்பம். அவர் உண்மையறிய விழைந்து தத்துவங்களை ஆராய்ந்தார்; இம்மைவாழ்க்கையில் எது சரி எது பிழை எது நன்மை எது தீமை என்பவற்றை வரையறுக்கமுயன்றனர். டெல்பிக்கோயிலார் அவரை மானுடருட் சிறந்த ஞானியென மதித்தனர். அவர், "தான் அறியாமையில் மயங்கியிருப்பதை உணர்ந்தடொழிய வேறொன்றையும் உணரவில்லை"யென உரைத்தனர். அவருடையமுறை கேள்விமுறையெனச் சொல்லப்படும். அவருடைய மாணாக்கருட் சிறந்தோர் பிளேற்றோ, சனபன், கிறிற்றியாசு, அல்சிப்பியாடிஸ் என்போர். கொடுங்கோலன் கிறிற்றியாசு குருவை விரோதித்தான். சோக்கிறிற்றிஸ் இளைஞர்மனத்தைப் பாழாக்கினாரெனச் சிலர் சான்று கூறி அவரைச் சிறையில் இட்டு நஞ்சூட்டினர். அவர் இம்மை வாழ்க்கையை முழுமனத்தோடுந் துறந்தார்.

ஸ்பாட்டர் கி. மு. 399ல் பார்சியரோடு போர்புரிந்தனர். எதினியரும் தீபரும் கொறிந்தியரும் ஸ்பாட்டரிடம் அழுக்காறுற்று

உதவிபுரியவில்லை. எதீனியர், கொறிந்தியர் முதலியோருடைய துணைபெற்று ஸ்பாட்டருடன் போர்க்கெழுந்தனர். எதீனியர் ஸ்பாட்டருடைய கடற்படையை அழித்தனர். ஸ்பாட்டர் கொறிந்துநகருக்கருகில் வெற்றியடைந்தனர். தீபரையும் எதீனியரையும் தவிர ஏனைய யவனசாதியார்யாவரையும் ஸ்பாட்டர் அடக்கியாண்டனர்; அன்றியும், கி. மு. 382ல் தீபுநகரைப் பிடித்தனர்; எதீனியர் துணையுடன் தீபர் போர்க்கெழுந்து பின்னரும் தோற்றனர். ஸ்பாட்டர் எதீனியரோடு போர்செய்தனர். கி. மு. 371ல் ஸ்பாட்டரும் தீபரும் துணையின்றிப் பகைத்தனர். போர் மூண்டது. எப்பாமினண்டாஸ் என்னும் தீபருடையபடைத்தலைவன் வாகைசூடினன்.

உடனே யவனநாட்டினர் பலரும் ஸ்பாட்டரோடு பகைத்தெழுந்தனர். தீபர் தழைத்தோங்கினராக எதீனியரும் கொறிந்தியரும் அழுக்காறுற்றனர். எப்பாமினண்டாஸ் மசிடோனியரை வெருட்டித் துணைபெற்றான். ஸ்பாட்டரும் எதீனியரும் சேர்ந்து அவனை எதிர்த்தனர். ஸ்பாட்டர் தோல்வியடைந்தாலும் தீபர் தலைவன் எப்பாமினண்டாஸ் கொல்லப்பட்டான்.

ஸ்பாட்டரும், தீபரும், எதீனியரும் ஒருவரோடொருவர் போர்செய்து தளர்ந்தநிலையில் மசிடோனியர் படையெடுத்து யவன தேசமுழுவதிலும் தம் ஆணையைச் செலுத்தினர். இம்மசிடோனியர் சுத்த யவனரல்லர். கி. மு. 359ல் பிலிப்பு மசிடோனியா தேசத்தை ஆண்டு தன்படையைப் போர்முறைகளிற் பழக்கினான். இதற்கிடையில் யவனநாட்டிற் சமயப்போர் நடந்தது. பாக்கியர் டெல்பிக்கோயிலைக் கைப்பற்றினர். பாக்கியருக்கு எதீனியரும் ஸ்பாட்டரும் துணைபுரிந்தபோதிலும் தீபர் அவர்களை வென்றனர். தீபர் மசிடோனியரையும் போரில் வென்றனர். பின்பு பிலிப்பு தீபரை வென்றான். எதீனியருள் புகழ்பெற்ற நாவலன் டெமஸ்தனிஸ் என்பான் 'மசிடோனியர் யவனதேசமுழுவதிலும் தம் ஆட்சியைச்செலுத்துவரெனத் தெரிகிறதாகலின் தீபர், எதீனியர், ஸ்பாட்டர் முதலியோர் ஒருங்குசேர்ந்து மசிடோனியரைத் தொலைக்கவேண்டு'மெனச் சொற்பொழிவுநிகழ்த்தினான். பிலிப்பு பாக்கியரை வென்றான். யவனநாட்டார் பிலிப்பைச் சமயக்கிரியை நடாத்தும் சபைக்குத் தலைவனாக்கினர். எதீனியருக்கும்



மசிடோனியருக்குமிடையில் கி. மு. 340ல் போர்மூண்டது. இப்போர் மூன்றாஞ் சமயப்போர் என்று சொல்லப்படும். டெமஸ்தனீஸ் நாவலனுடைய ஏவற்கு இணங்கி எதீனியர் தம் பகைவராகிய தீபரோடு நட்புக்கொண்டனர். கி. மு. 338ல் பிலிப்பு இருசாதியாரையும் கரோனியாக்களத்தில் முறியஅடித்தான். யவனருடைய சுவாதீனம் இதனுடன் தொலைந்தது. எதீனியர், தீபர், கொறிந்தியர் என்போர் சமாதானமாயிருந்தனர். ஸ்பாட்டர்மாத்திரம் மசிடோனியரை எதிர்த்தனர். பிலிப்பு யவனரைவென்றபின் பார்சியரோடு போர்புரிய எத்தனித்தான்.

### அலெச்சாந்தர்.

பிலிப்பின்சுற்றத்தார் அவனைக் கொன்றார்களாயினும், அவன் மகன் அலெச்சாந்தர் பகைவரைவென்று அரசாண்டான். அச்சமயத்தில் தீபர் பகைத்தெழும்பினராக, அலெச்சாந்தர் தீபுநகரைச் சாம்பராக்கினான். யவனரை இங்ஙனம் அச்சுறுத்தியபின் அலெச்சாந்தர் பார்சியரோடு போர்புரிதற்குப் புறப்பட்டான். அலெச்சாந்தர் 30000-காலாட்படையும் 5000-புரவிப்படையும் திரட்டிக்கொண்டு எதிரிகளைத் தேடித்திரிந்தான். அலெச்சாந்தர் குதிரையேற்றத்தில் மிகப் புகழ்பெற்றோனாவன். ஒருமுறை குடிமகன் ஒருவன் பிலிப்புக்குப் புரவியொன்றை அளித்தானாக, அதனை ஏறிச்செலுத்துவாரொருவருமின்றியிருக்க, அலெச்சாந்தர் தந்தை தடைசெய்யவும் கேளானாய் அப்புரவியிலேறிச் சாரிவந்தான். மேலும், உலகமுழுவதையும் ஒருகுடைக்கீழ்த் தான் ஆளவேண்டுமென அலெச்சாந்தர் விழைந்தான். கி. மு. 336-ல் பார்சியருடைய அரண்மனையில் டேரியஸ் என்பான் அரசனாக வீற்றிருந்தான். டேரியஸ் யவனக்கூலிப்படையும், பினீசிய எகிப்தியத் துணைப்படைகளுமாக 500,000 படையுடன் அலெச்சாந்தரை எதிர்த்தான். அப்போரில் டேரியஸ் அஞ்சியோடினன். யவனப் படைவீரர் எண்ணாயிரவர் பகையூடறுத்து எகிப்துக்கு ஏகினர், அலெச்சாந்தரின் படையில் 1000-வீரரே மடிந்தனர். பார்சிய அரசியும் அவள் புத்திரிகளும் அலெச்சாந்தர்வசமாயினர். கி. மு. 332-ல் அலெச்சாந்தர் தயர்ப் பட்டினத்தை முற்றுகையிட்டான். அலெச்சாந்தர் எருசலநகர் சென்று வணங்கினானென யூதசரித்திரவாசிரியனான யோசேப்பு எழுதினான். பின் அலெச்சாந்தர் எகிப்துநாடடைந்து பார்சியரை ஆங்கிருந்து துரத்தி அலெச்சாந்திரியா

என்னும் நகரை அமைத்தான். கி. மு. 331-ல் யூபிறற்றிஸ் நதியைக் கடந்து அரபிலாயுத்தகளத்தில் டேரியஸ் என்னும் வேந்தனைப் பின்னரும் புடைத்தான்; இதில் 40000-பார்சியர் மடிந்தனராம். மசிடோனியாதேசத்திலிருந்து 15000-வீரரைத் துணைப் படையாக அலெச்சாந்தர் பெற்றான். அலெச்சாந்தர் டேரியஸ்வேந்தனைக்கொன்று அரசருக்குரிய முறைப்படி அவனுடம்பைத் தீயிவிட்டான்; பின்னர்ச் சிதியநாடுபுக்குச் சிதியரை வென்றான்.

அலெச்சாந்தர் பார்சியருடைய நடை உடை முதலியவற்றைப் பின்பற்றி ஒரு பார்சியப்பெண்ணை விவாகஞ்செய்துகொண்டான். தன் படைவீரரையும் அவ்வண்ணஞ்செய்யும்படி ஏவினான். பகைத்தெழுந்த வீரரை அலெச்சாந்தர் கொன்றான். மசிடோனியவீரர் சிலர் அரசனை வெறுத்தனர். அரிஸ்தாத்திலின் மருகன் கலிஸ்தினஸ் அலெச்சாந்தரைச் சேயஸ்தேவரின் குமாரனெனத் தொழுத ஒரு தத்துவஞானியை இழித்துப்பேசினான். அலெச்சாந்தர் அதைக் கேள்வியுற்றவுடனே அவனைக் கொன்றான். இவன், இத்தகைய பல பாவங்களைச்செய்து கொடுங்கோல்புரிந்தான். கி. மு. 327ல் படையோடு இவன் இந்துநதியைக் கடந்தான். போரஸ் என்னும் இந்தியவேந்தன், யானைப்படையை முன்னணியில் நிறுத்தி இவனொடு போர்புரிந்தான். யானைகள் காயப்பட்டுப் படையணி குலைந்தது. இந்தியர் தோற்றனர். போரஸ் காயப்பட்டுவீழ்ந்ததும் அவனுடைய யானை அவனையெடுத்துச்சென்றதாம். அலெச்சாந்தர் அப்போரைப் பெரிய வெற்றியாக எண்ணவில்லை. இந்திய வேந்தனோடு உடன்படிக்கை எழுதிப் பெற்றுக்கொண்டு திரும்பினான். இந்துநதியை நீலநதியின் கிளையென அலெச்சாந்தர் நினைத்ததிலிருந்து கிரேக்கர் பூகோளநூல் கற்றிலரென ஊகிக்கலாம். கிரேக்கர் இந்துநதியைக் கடந்து போர்புரிய மறுத்தனர். கி. மு. 326-ல் ஒன்பதுமாதம் இந்துநதிவழிப் பிரயாணம்செய்து அலெச்சாந்தர் இந்துசமுத்திரத்தையடைந்து பார்சியநாடு திரும்பினான். அலெச்சாந்தர் தன் 33-ஆம் வயதில் சுரநோயால் இறந்தான். யவனதேசம், சின்னாசியா, எகிப்து, பர்சியா, ஆப்கனிஸ்தானம் என்னும் தேசங்கள் உட்பட்ட பெரிய இராச்சியம் அலெச்சாந்தர் இறந்தவுடன் நிலைகுலைந்தது. அலெச்சாந்தரின் மூன்றாம் மனைவியாகிய றொக்சானாவும், டேரியனுடைய மகளாகிய இரண்டாம் மனைவியும் கலகப்பட்டனர்.



யவனர் பகைத்தெழுந்து மசிடோனியருடன் போர்புரிந்தனர். அலெச்சாந்தருடைய படைத்தலைவர்கள் தம்முட் கலகப்பட்டனர். கலகமுடிவில் மூன்று இராச்சியங்கள் நிலைத்தன. மசிடோனியாவையும் யவனநாட்டையும் அந்திப்பட்டர் ஆண்டான். சிரியாதேசத்தை அந்திக்கோன் ஆண்டான். எகிப்தைத் தலெமி ஆண்டான். ஸ்பாட்டாநாடு சுவாதீனமாகவேயிருந்தது. மசிடோனியா ராச்சியம் உள்நாட்டுக்கலகங்களால் வலிகுறைந்து சீர்கெட்டது. யவனநாட்டார் பலரும் ஒருவரோடொருவர் பகைத்துக் கலகம் விளைத்துக்கொண்டேயிருந்தனர். இதையறிந்த உரோமர் யவனநாடு பலவற்றையும் கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சிக்குட்படுத்தினர்.

### யவனநூல்வரலாறு.

யவனருடைய பழையநூல்கள் யாவும் செய்யுளுருவமாகவே அமைந்தன. கி. மு. 800-ல் இலியட்டு, ஒடிசி என்னும் இரண்டு தொடர்நிலைச்செய்யுள்கள் தோன்றின. அடுத்த நூற்றாண்டில் ஈசியஸ் என்பான் ஒழுக்கநூலொன்றை இயற்றினான். கொடுங்கோலரசர் புலவர்களைப்புரந்தனர். அகப்பாடல்களும் புறப்பாடல்களும் மலிந்தன. சபோ என்பான் பாடிய அகப்பாட்டுக்கள் காமச்சுவைமிக்கன. பின்டாரிஸ் என்னும் புலவன் அலெச்சாந்தர் தீபரை வென்றதைப் பாடினான். கொறிந்துநகரத்து ஆரியன் களிப்பாட்டுப் பாடினான். அவன் பாடல்கள் அழுகைச்சுவைவிரவியவை. துன்பவியல்நாடகங்கள் நடிக்கப்படுமுன் ஆடு பலியிடப்படுதலால் நாடகக் கூத்தை ஆட்டைக் குறிக்கும் யவனமொழியால் வழங்கினர். நாடக ஆசிரியர்களிற் சிறந்தோர் கி. மு. 525-க்கும் கி. மு. 450-க்கும் இடையில் தோன்றினர். யுறிப்பிடீஸ் என்போனும் அஸ்ஸீலஸ் என்பவனும் நாடகநூல்வல்லோரெனப் புகழ்ப்பெற்றனர். கி. மு. 444-ல் அரிஸ்தபானன் என்பான் நகைச்சுவைசெறிந்த நாடகங்கள் பல எழுதினான். 280-ல் தியோகிறிற்றஸ் என்பான் பள் எனும் நூலை இயற்றினான். கி. மு. 471-ல் தியூசிடிஸ் என்போன் யவனசரித்திரத்தை வசனநடையில் எழுதினான். சனபன் கி. மு. 362-ல் அவ்வரலாற்றைத் தொடர்ந்தான். பிளேற்றோவும் அரிஸ்தாத்திலும் தத்துவநூல்கள் பல இயற்றினர்.

### யவனர்வாழ்க்கை.

ஆசிரியர்கள் யவனருடையவாழ்க்கையைப்பற்றி விரித்துக் கூறவில்லை. குடியானவன் ஒவ்வொருவனும் போர்முறைகளிற் பயிலல்

வேண்டும்; அரசனர்க்கு ஆலோசனைகூறும் அவையத்தாரைத் தெரிந்தெடுக்குங்காலங்களில் வாக்களிக்கும் உரிமையும் அவனுக்குண்டு. அந்நாட்டில் அடிமைகளும் விலைப்பட்டனர். கடைவீதியில் வீணர் வீண்பொழுதுபோக்கினர். யவனதேசமெங்கும் வீரர் போர்த் தொழில்பயிலும் கழகங்கள் நிறுவப்பட்டன. அக்கழகங்களில் ஓடுதல், பாய்தல், மல்யுத்தஞ்செய்தல் ஈட்டியெறிதல் முதலிய படைப்பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கே அணிநூலும் கற்பிக்கப்பட்டது. தேர்கடாவுதல் வேட்டையாடுதல் கோழிப்போர் பார்த்தல் கவறாடல் என்பன யவனருடைய விளையாட்டுக்களுட் சில. ஆடவரும் பெண்டிரும் அளவளாவுதலில்லை. யவனர் எண்ணெய்தேய்த்து நீராடுவர். உண்ணும்போது இடக்கையிற் சாய்ந்து படுத்திருப்பர். குடிவகைபாவித்தபின் விறலியரின் ஆடல் பாடல்களைக் கண்டு கேட்டு இன்புறுவர். பாம்பாட்டுதல் முதலிய வித்தைகளையும் கண்டு களிப்பர். பெண்களுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அளிக்கப்படவில்லை. பிள்ளைகளை வளர்த்தலும் வீட்டுப்பணிசெய்வதுமே அவர்கள் கடமை. பெண்கள் நூல்நூற்றனர். அடிமைகள் தோட்டவேலை, சுரங்கவேலை, காவற்றொழில் முதலியன செய்தனர். தகப்பன் தன்பிள்ளையைத் துறந்துவிடலாம். பிள்ளைபிறந்த பத்தாநாள் பெயரிட்டு விருந்துகொண்டாடுதல் வழக்கம். ஆறுவதாண்டு கழிந்தபின் அடிமைகள் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச்செல்வர். பாடசாலைகளிற் கணிதம் எழுத்து தேகப்பயிற்சி இசைநூல் அணிநூல் முதலிய கற்பிக்கப்படும். அரைநாள் கல்விப்பயிற்சியும் அரைநாள் தேகப்பயிற்சியும் நடக்கும். இளைஞர் பதினாறும்வயதில் மயிரைக் குறுகக் கத்தரித்துக்கொண்டு போர்முறை பயிலுவர். இருபதாம் வயதிற் குடியுரிமை பெறுவர். யவனருடைய உடை அடிவரை மறைத்த ஒரு அங்கியும் ஒரு போர்வையுமே. மிதியடியணிதலுண்டு. வழிச்செல்வோர் தலையணி அணிதலுமுண்டு. அடிமைகள் வலக்கையையும் தோளையும் மூடாது விட்டுவிடுவர். ஆடவர் மீசையும் தாடியும் வளர்த்தல் வழக்கம். பண்டையவனர் பெரிய இல்லங்கள் அமைக்குமாற்றலுடையராயிருந்தனரென்று விளக்கும் ஆதாரவுகள் அகப்படாவிடினும், ஓவியம் சிற்பம் முதலிய துறைகளில் அவர் சிறந்து விளங்கினரென்று அறியலாகும்.

---



வாளும் வேலும் வலமிடத் தாங்கிக்
கால னிகர்ப்போர் கணக்கிலர் சுற்றச்
சுவண கிரியுந் துகளெழ வீசிக்
கவணெறி வோர்கைக் கயிறெறிந் தேக
வாளிக் கூட்டைத் தோளிற் றூங்கி
யாளி யன்னவில் லாளிகள் தொடரப்
பரிமிசை வீரர் திரைமிசைக் கலம்போற்
பொருநசை விஞ்சிப் புகைந்துமுன் செல்ல
உவந்துல கேத்தும் உருப்பல தாங்கி
நிவந்தெழு கொடிநிழல் நிரைநிரை நெருங்க
அயிலெறி பொறிகள் அளப்பில நகரப்
பயில்நட மாக்கள் பாடின ராடக்
கல்லெடு சகடம் கதித்தெரு திழுக்கப்
பகழிபெய் பண்டிகள் பற்பல படரக்
கள்ளொடு வண்டிகள் காவதம் இழையப்
புள்ளும் மாவும் புசிப்பன பலவோ
டுணவுப் பொதியெடுத் தொட்டகங் கோடியும்
பணிசெய் மாக்கள் பற்பல கோடியும்
வழிச்செல வுக்காய் வைத்துள பைம்பொன்
கழுத்திற வீர்த்திழை கர்த்தபங் கோடியும்
பம்பை பம்பும் பரிசனங் கோடியும்
கொம்ப லப்பிக் குனிப்பவர் கோடியும்
இம்ப ருலகெலா மெழுந்தென இயங்கக்
காதுவோர் மகிழ வூதுவோ ரோதையும்
தட்டினுங் கொட்டினுந் தகைந்தெழு சும்மையும்
பம்பையுங் கொம்பும் பரப்பொலி மிகையும்
இருப்புச் சட்டைகள் இடித்தெழு துழனியும்
விருப்புடன் மகிழ்வோர் சிரிப்புடன் மயங்கக்
காவல் செய்யுங் கதநாய்க் குரலும்
பாவ லாளர் பாட்டிசைக் குரலும்
பரிகனை குரலும் குரைகழற் குரலும்
விரிதிரை வேலைக் குரலென வொலிப்பப்
படமா டங்கள் பத்துநூ றாயிரம்
இடைபல நகர மெழுப்பிமுன் னிருக்க
வலக்கை வேலும் இடைக்கை வாளும்
தலைமுதற் கால்வரை தகட்டிருப் பங்கியும்

இடத்தொளிர் வாளும் ஏந்தின னாகிக்
கதித்த சொல்லன் கனலெழு கண்ணன்
மதித்த நெஞ்சன் மால்வரைத் தோளன்
ஆளியும் அரியும் அகல உதைப்பன்
கூளியும் பேயும் குலுங்க விழிப்பன்
கான்மேற் செல்லும் வான்பரி யேறிக்
கடிதினி லுன்றன் காடடை மனத்தன்
அன்னவற் காட்செய் தின்னுயிர் காப்பாய்
மன்னவ நிற்கே மங்கள மெய்த.

நந்தன்:—[நகைத்து] தூதரே! மிகவும் அழகாய்ச்சொன்னீர். வெகு சாமர்த்தியமாய் ஒருண்மையைக்கூட மறைத்திருக்கிறீர். பாஞ்சாலன் உங்களைச் சரணடைந்தது உண்மைதானோ! நம் நாட்டுத் தூதர்கள் வேறுவிதம் சொன்னார்கள். உங்களரசன் தனக்குள்ள யுத்தசாமர்த்தியமுழுமையுங்காட்டியும் அவனை வெல்லமுடியாமல் இரவில் அவன் படையாளரும் சேனைத்தலைவரும் தூங்கும்பொழுது முன்புறம் தாக்கவலியற்றவனாய்த் திருடன்போல் ஒருவருமறியாமல் ஆற்றைக்கடந்து பின்புறம் தாக்கினனாம்! எங்கள் தேசத்தில் இத்தகைய யுத்தம் மகாபாபயுத்தமாகும். அங்ஙனம் செய்தோரை க்ஷத்திரியஜாதியைவிட்டு விலக்கிவைப்போம். அவரோடு உணவும் அருந்தோம். இன்புறும்வாழ்விலும் எதிர்சென்றுதவோம். அவர் மரபே தீமரபாய்ச் சிதைந்தழியும். மேலும், உங்கள் அரசன் தனக்குப் போர்வலி மிகுந்துளதென்று தானே யுத்தசந்நத்தனாய்க் கிளம்பி, அமைதிபெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்த அநேகம் ராஜ்யங்களை அதர்மயுத்தபரம்பரையாற் சீர்குலைத்து நிரபராதிகளான அளவிறந்த மாந்தரையழித்துப் பயிர்களின் விளைவைக் கெடுத்து, உயிர்களின்வாழ்வைத் தொலைத்து, ஜயபேரி அடிக்கின்றனன் போலும்! எங்கள்மரபிலோ இது மகாபாபிகளின் கருமமாகும். கப்பங்கொடாத சிற்றரசர்மேலும் நாட்டைக்கவர்ந்த மாற்றார் மேலும் பசுவைக்கவர்ந்த பகைவர்மேலும் பகையளித்துதவும் தகைமையோர்மேலும் இத்தகைய மற்றுஞ்சில குற்றஞ்செய்தோர் மேலுந்தான் நாங்கள் போர்புரியலாம். அப்போருக்குக் காலமுங்களமும் இடமும் நடுவெளியும் குறிப்பிடல்வேண்டும். படையொத்த பகைஞரே பொரற்குரியர். வில்லெடுத்த வீரர் வாளெடுத்தோர்



மேல் எய்யார். இருவரும் மல்லரைக்கொல்லார். வாகனமூர்வாரும் அங்ஙனமே. குதிரைவீரர் காலாளைக் காதார்; கரியினர் பரியினரை மோதார்; தேரோர் தேரோரைத்தவிர மற்றியாரையும் பாரார்; அர்த்தரதரும் மகாரதரும் அதிரதரும் தத்தமக்கொத்த தகைமைசால் தேரினரையே எதிர்த்துப்பொருவர். மேற்படுதகைமையர் கீழ்ப்படுகிழமையர் தம்மேற் போர்தொடர்ந் தூறுசெய்யத்தொடங்கினாலன்றித் தாம் முதலில் அவர்மேற் போர்தொடங்கார். இருவர் எதிர்த்தபோரில், இளைத்தவர்க்குதவியாகப் பொருவது கடனன்று. மறைநீதிவழுவாதுற்ற புறநாடழித்தல் மகாபாதகமாகும். இவ்விதி பிறழ்ந்துகொல்பவர் வீரசொர்க்கம்பெறாது கொலைக்குற்றத்துக்கு ஆளாவர். இத்தகையவிதிகளிற் சிறிது பிறழ்ந்து கௌரவரை வென்றதனாலன்றோ பஞ்சபாண்டவரும் படிபுரக்காதழிந்தனர்; கண்ணன்காத்த மண்ணும் கடல்கொண்டொழிந்தது. தம்முயிரினும் பெரிதாய்த் தர்மத்தைப் பாதுகாத்து மன்னுயிரைப்பேணி உலகளிக்கும் அரசனொருவன்மாட்டு உங்கள்தலைவன் பாபயுத்தஞ்செய்து படையழித்தமையின் அவ்வளவு கொலைக்குற்றத்துக்கும் அவன் ஆளாய்க் கூட்டியபடையும் ஈட்டியபொருளும் சிதைந்து, வலியும் வாணாளும் குறைந்து, சீரும் செருக்கும் இழப்பனென்றறிமின். மறப்போரால் வென்று கைக்கொண்ட நாடுகளைச் சற்றேனும் ஆண்டனுபவித்த மன்னரைக் கண்டிலம். அத்தகையோர் வெற்றியோடு மீண்டவுடன் கூற்றுவன்முகத்திற்றான் விழிப்பர்; அவர், அழியாநரகிடை அநந்தகாலம் வருந்துவர். இத்தகைய போர்புரியும் மன்னன் உங்கள் தேசத்து வியாபகத்தெய்வமென்னின் உங்கள்மதத்தின்பெருமை நன்குவிளங்குகிறது. நீவிரோ இவ்விந்து தேசத்திற்கு நாகரிகவிளக்கெடுத்துவந்தீர்! அவ்விளக்கைச் சிந்துநதிக்கரைவந்தபின் பார்த்தீரா? அந்நதிக்கரையில் வீசும் காற்றில் அஃது அவிந்துபோயிருத்தல்வேண்டும். இல்லையாயின் பரிதிமுன் மின்மினிபோல் ஒளியின்றிக் கருத்திருக்கும். இருப்புச்சட்டையும் வில்லும் வேலும் வாளும் உடையீராதலின், கயிற்றிற்கட்டிய கல்லுண்டையராய் எதிர்ப்படுமிருகத் தெறிந்ததைக்கொன்று,

பச்சையாய்த் தின்று பசியாறிடும் உங்கள் அயல்நாட்டாரைக் காட்டிலும் நீங்கள் நாகரிகமுடையவரென்பதில் ஐயமில்லை. நீவிர் தோலுடையுடையீர், துணிகண்டறியீர். பாரசிகனுக்கு உதவியாய்ப் பாஞ்சாலன் அனுப்பின குதிரைவீரர்மாட்டன்றோ நீவிர் பட்டாடையும் பஞ்சுத்துணியும் முதலிற் கண்டீர். பரமரும் சீனரும் எங்களைப்போன்ற நாகரிகமுடையவர்களே. அவர்களிடத்தும் உங்கள் விளக்கு உதவாதுபோகும்; ஆதலின் உங்கள் தலைவனிடம் கடிதிற்சென்று நம் நாட்டெல்லையோடு திரும்பிச்செல்லும்படி நாம் உத்தரவிட்டதாகச்சொல்லுங்கள். அதனை அவன் மீறுவானேல் தர்மயுத்தத்துக்குச் சந்நத்தனாகச் சொல்லுங்கள். அதர்மமாய் யாதானுமோருயிரையும் கொல்லத்துணிவானாகில் யான், என்

சேனைத் தலைவரும் சினப்பெரு வீரரும்
செருக்களத் தெய்தா தொதுங்கி நிற்க
ஒற்றைக் குதிரையி னொருவா ளேந்திப்
பற்றற நீத்த பரிசன னாகி
முற்றிய வீரர் முடியச் சாடிச்
செற்றுக் களைந்தென் சினக்கன லாற்றிப்
பிணக்குவைப் பொருப்பும் நிணப்பொதி சேறும்
குருதிக் கடலும் சொரிதரு மாறும்
வீரர் நீத்த வெறும்படைக் காடும்
சேரும் களமாம் சிற்றுல கொழிய
ஊளை யோதையி னுழைநரி யழைப்பக்
கூளியும் பேயுங் குனித்தக மகிழச்
சுற்றிய கழுகே கொற்றக் குடையாக்
குற்றக் கொலைஞர் குவிபிணக் குப்பைக்
கற்றஞ் சேர வறமுடி சூடி
வெற்றித் தாரொடு மீண்டென் னகரம்
போர்த்த வுடையிற் பொலிகுரு திப்புனல்
கீர்த்திச் செக்கர் கிளர்ந்த தொப்பப்
பானிற வெள்ளைப் பரியின் மேனி
பஞ்சி யூட்டிய தென்னப் பொலிய
வஞ்சகர் வாழ்வை வதைப்ப னென்றும்
விஞ்சிய தோள்வலி வீரற் குரைமின்.



தூ-த:—உங்களுடைய யுத்ததர்மமெல்லாம் எங்களுக்குமிகுந்த நகைப்பையுண்டாக்குகின்றன. யுத்தத்திற்கூடத் தர்மமா? தோள்வலிமிகுந்தவர் குறைந்தவரைத் தம் வலியால் அடக்குதல்தானே யுத்தம்? இதில் வெற்றியொழிய வேறெதிலும் கருத்துள்ளவன் வீரனாகவேமாட்டான். தோள்வலியின்றித் தோல்வியுற்றழிபவர் எந்நாளும் தர்மநியாயத்தைப்பற்றித்தான் பேசுவார்கள். வலியுடையோர் அதற்கு இணங்குதல் மனவலியின் குறைவாகும். மேலும் ஐந்நூறுகாவதத்துக்கப்பாலுள்ள அயல்நாட்டுவேந்தராகிய எம்மரசருக்கு நும்தேச யுத்தநியாயங்கள் தெரியா. அவைகளை அநுசரிக்கவும் அவர் கடமைப்பட்டவரல்லர். இன்னும் ஒரு செய்தி சொல்லுகிறேன். பாதியுலகைவென்று தன் ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்திருக்கும் எம்மரசர் பாதிவான் கடந்து உச்சியில் விளங்கும் கதிரவன்போல் உக்கிரம் மிக்குப் பொலிகிறார். இச்சமயம் அவர்கோபத்துக் காளாகும் மன்னரெவரும், காலையில் மறையாது கலந்துநின்ற பனிபோல் இருந்த இடமும் போன இடமும் தெரியாது மறைவர். ஆதலின் நீங்கள் அவரைச் சரணடையாதமட்டில் எங்கள்தேசவழக்கப்படி நாங்கள் செய்யும் யுத்தத்திற்கு முன்னிற்கவேண்டும்.

நந்தன்:—உங்கள் தலைவன் தான் ஏதோ பாதியுலகைக் கடந்ததாக வீணெண்ணங்கொண்டு தன் சேனையையும் உயிரையும் இழக்காவண்ணம் அவனிடத்திற்போய் உடுக்க உடையும் எடுக்கப் படையுமின்றிக் காட்டிலலையும் கயவர்கள்மாட்டே அவன் உச்சியிற்றோன்றும் பரிதியாவானென்றும், சிந்துநதிதான் அவனுலகின் கீழெல்லையென்றும், அதில் அத்தமயமாய்த் திரும்பும்படிக்கும் நான்சொன்னதாகச் சொல்லுக. அந்நதி கடந்து அவன் என்னாடடைந்தால் முன்சொன்னவண்ணமே செய்வேனென்றுரைமின்.

தூ-த:—அரசே! எம்மரசராணையால் யாம் இனிக் கூறுவது சிறிதே உளது. எங்கள் வெற்றியைக்குறித்துத் தெய்வந்தொழ நாங்கள் நடத்தும் உற்சவத்திற் சிலமாதங்கள் கழியும். அதன்பிறகுதான் மறுபடி போர்புரியத் தலைப்படுவோம். அதற்குள் நீர் எம்மரசரைச் சரணடையாவிடின் அவரது சினத்துக் காளாவீர்.

கங்கையின் நன்னீர் பொங்கிப் பாய்தலிற்
செந்நெலும் மரனும் செழித்து வளரவும்
சோலையும் காடும் சூழ்ந்தினி திருக்கவும்
மக்களும் மாக்களும் மகிழ்மலி வாழ்வோ
டெக்குடி யினரும் ஏத்துபு திரண்டு
வானகத் தோரும் ஈனமுற் றிரங்கப்
பல்லாற் றானும் பண்புடைத் தாகி
எல்லாச் செல்வமும் எய்துமிந் நாட்டியல்

யாங்கூற எம்மன்னர் கேட்பின் இதனை வென்றுகொள்ளாது தந் தேசத்தை ஒருக்காலும் நினையார்.

நந்தன்:—இது வீரமும் கல்வியும் மிகவும் விளையும் நாடு. இதில் மாற்றார்வலி செல்லாது. அதன்மம் இதன் எல்லையையும் அணுகாது.

[தூதர் வணங்கிச் செல்லுதல்.]

---

## அங்கம்-I.
### களம்-3.

இடம்:—பாடலீபுரத்தில் ஒரு பூஞ்சோலை.
பாத்திரங்கள்:—சுலோசனை, சந்திரன், சாகரன்.

சுலோசனை:—(சோலையைச் சுற்றி நோக்கி) ஆ! ஆ! ப்ரும்ம சிருஷ்டியின் மேன்மையே மேன்மை. மனிதன் கடவுளைப்போல் தானும் பிரகிருதியிலுள்ள பொருள்களைப் பலவஸ்துக்களாலும் செய்யத்துணிகிறான்; காகிதத்தாலும் நெட்டியாலும் பூக்களும், மண்ணாலும் மரத்தாலும் காய்கனி வகைகளும் செய்கிறான். இவையெல்லாம் பேதைமையன்றோ? அவன்செய்யும் பூக்களில் வண்டு மொய்க்குமா? தேனூறுமா? வாசனையுண்டா? பழங்களில் மணமுண்டா? சுவையுண்டா? காய்கள் எதற்கேனும் உதவுமா? கரைத்துப்பூசும் வர்ணங்கள் படைப்பிலுள்ள நிறங்களைச் சிறிதேனும் நிகர்க்குமா? இந்தத் தாமரைப்பூவில் நாளத்தின் பச்சை இதழடியின் வெளுப்பிலும் அவ்வெளுப்பு மேலிதழின் சிவப்பிலும்



அடங்கிமறைவது தெரிகிறதா? அவ்வவ்விடத்தில் அந்தந்நிறம் மேம்பட்டிருப்பினும், நிறம் மயங்கும் நடுவிடங்களே மிகவும் அழகாயிருக்கின்றன. இவ்வழகும் மணமும் தேனும் இம்மலர்களுக்கு என்னபயனைத்தரும்? நாம் கண்டு மோந்து களிக்கவும் வண்டுகள் பசியாறவுமே உதவுகின்றன. மலர்களும் மதிப்படைந்து மாந்தரால் தலையில் அணியப்படுகின்றன. மணமறிந்து நிறங்கண்டு தேடிவரும் வண்டுகள் தேனுண்டு மகரந்தத்தைக் குலைத்துவிட்டுக் காய்க்கு விதையிட்டுச் செல்லுகின்றன. இந்தக் காயன்றோ பூவுக்கு முடிவையுண்டாக்குகின்றது. நம்போன்ற பெண்கள் வாழ்வும் இங்ஙனமேயன்றோ? மாதர்வனப்பே மைந்தரை அவர்பாற்படுத்தி இருவரும் வலியழிந்திறக்கக் காரணமாகின்றது. உலகத்திலுள்ள சகலஜந்துக்களிலும் ஆணுக்கே வனப்புமிகுந்திருக்கவும், பெண்கள் அவைகளைத் தொடர்ந்துசெல்லவும் மனிதஜாதியில்மட்டும் மாதர்களே வனப்பின்மிகுந்தவராகின்றனர். பகுத்தறிவுள்ள மனிதனைப் பிணிக்க வனப்பெனுமிதுவே வலியுறு கயிறாம். பெண்ணுலகன்றோ ஆணையும் பெண்ணையும் அழித்துத் தன்வயிற்றில் மறுசிருஷ்டி செய்கிறது. தானீன்ற காய் தனக்கே கூற்றமாய் அழிகிறது. உலகைப் படைத்துக் காத்தழிப்பதும் பெண்ணுலகுதானே? அதனாலன்றோ சக்தியைப் பெண்ணுருவாய்ச் சொல்லுகிறார்கள்? பிறப்பெனும் துன்பமும் மூப்புப் பிணி சாக்காடும் மாதரில்லையெனின் இல்லையாகுமே. உலகைப்படைத்தழிக்கும் பாபத்துக்கு ஆளாகாமல் பெண்கள் கன்னியராயிருந்து மாய்தல் மிக வுயர்வாகும். ஆனால் என்விஷயத்தில்மட்டும் சந்திரன்வனப்பும் அவர் புஜபலமுமன்றோ என்னை அவர்பாற்படுத்துகின்றன. என்மனத்தை எவ்வளவு திடப்படுத்திக்கொண்டாலும்,

மலரின் மணமும் மதுகரத் தொலியும்
மந்த மாருதமும் சந்திர னொளியும்
தாரகைக் கணமும் தயங்கு மிவ்விடம்
வீரநீ யின்மையின் வெற்றிட மாகும்.

[சந்திரன் படபடப்போடு வேகமாய் ஓடிவரச் சுலோசனை அவனைக் கண்டு மரத்தடியில் ஒதுங்கிநின்று,] ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம். அமர்ந்த நடையும் குளிர்ந்தகண்ணும் சிரித்தமுகமுமுடையராய் வரும் என்னருமையன்பர் இவ்வளவு படபடப்போடுவருவதற்குக் காரணமென்ன? ஏதேனும் அவர்க்குத் தீங்குநேர்ந்ததோ? [சந்திரன் அணுகக் கைகூப்பி வணங்கி,]

விற்பிடித்த கைக்நடுங்க வியர்த்தழுங்கத் திருமேனி
சொற்பிதற்ற மூச்செறியச் சுழன்றலையக் கண்ணிணையும்
பொற்பழியப் புகுந்ததென்னென் புண்ணியனே புகன்றிடுவீர்
முற்பிறவிப் பெரும்பேறாய் முன்னியுமைத் தொழுமெனக்கே.

சந்திரன்:—சுலோசனா! இப்பொழுதே நான் உன்னைவிட்டுப் பிரிந்து இம் மகததேசத்தின் எல்லைகடந்து வேற்றுநாடு செல்ல வேண்டும்.

சுலோசனை:—[பதறிப் பக்கத்திலுள்ள மரத்திற் சாய்ந்து அயர்ந்து] ஐய! என்னைவிட்டு இங்ஙனம் செல்லநேர்வானேன்?

சந்திரன்:—யானெய்த மான்மேல் அம்பெய்தவன் யாரோ வேடனென்று நினைத்து மன்னன்மகனை மார்பிலெய்து வீழ்த்தி விட்டேன். அவன் ஒருக்கால் இறக்கவுங்கூடும்.

சுலோசனை:-மதியின்மிக்க மாண்புடைச்சிங்கமே! நீர் அவனைப் பரிசனங்களால் அரசர்புதல்வனென்று அறியவில்லையோ!

சந்திரன்:—அவன் தனியேநின்றெய்தான். அவன் விழுந்த வுடன் பக்கத்திற்சென்று பார்த்தபின்னரே அரசர்புதல்வனென் றறிந்து மனம்வருந்தி அவன்காப்பாளர்வருவதன்முன் வேறுவழி யாய் வந்துவிட்டேன்.

சுலோசனை:—அங்ஙனமாயின் நீர் இத்தேசத்தைவிட்டு ஏன் ஓடவேண்டும்? அரசர்புதல்வன் இறப்பின் உம்மைச்சுட்டிக் குற் றஞ்சாட்டற்குரியார் ஒருவருமில்லையே? அவன் பிழைப்பின் நீர் எய் தது தர்மவிரோதமில்லையே? அது குற்றமாகுமா? அவனும் உம் மைத்தெரிந்து ஊறுசெய்யப்போகிறனோ?



வேறு.

1987 உருகெழுசெந் தழற்கடவு டருமராச
ஒனுயர்நிருதி வருணனடல் வாயு மேன்மைத்
தருமநிதிக் கிழவனொடீ சானனென்போர்
தனித்தனிநின் றேத்துமொலி தழைந்த தோடும்
பொருதிரைப்பாற் கடலமுத கிரணத் தோங்கிப்
புட்பகமா னத்துதயம் பொருந்தி மண்மேல்
வருபனிமா மதிக்கடவு டேவர் தேவே
மாதவனே யெனத்துதிக்கும் வாய்மைத் தோர்பால்.

வேறு.

1988 சக்கரன் றுவட்டா விட்டு வரியமான் றாதா பூடன்
மிக்குயர் வருண னஞ்சன் விவச்சுவான் சவிதா மெய்ம்மை
முக்கியப் பகனற் சான்றோர் மொழியுமித் திரனு மென்னத்
தொக்கபன் னிருவராய சூரியர் துதிப்ப தோர்பால். ()

வேறு.

1989 இலைகரிந்த வனமாறுண் டளிர்தளிர்ப்பப்
பறவைநிலத் திரங்கி வீழக்
கொலைதவிர்ந்து கொடுவரியின் குருளைகளான்
குவிமுலைப்பால் குழைவுற் றுண்ணக்
கலைதெரிந்த வருந்தவத்தோர் றுண்[1]மதியு
நிலைதிரியக் காமர் பண்ணி
னிலைதிரியா வகையினிற்றந் திரரிசைக்கு
மிசைத்திறமே நிறைந்த தோர்பால். (கருசு

1990 மாடகயா ழிடவயிற்கொண் டின்னரம்பு
தொறும்படர்ந்த மணிச்செங் காந்தட்
சூடகக்கை மெல்விரலால் வருடிசையும்
பல்லியமுந் தோன்றச் செம்பொற்

[பி-ம்.] [1] மதியி னிலைதிரியக். சா,

பாடகச்சீ றடிச்சிலம்பு புலம்பியிறு
மருங்குலெனப் பதறத் தெய்வ
நாடகம்விஞ் சையருமரம் பையருமிள
முலைகுலுங்க நடிப்ப ரோர்பால். (கருஎ)

1991 எத்தேவ ருளருயர்ந்த விண்ணுலகத்
தேற்றமெனா விசைந்த தேதங்
கத்தேவர் களுமுலப்பி லேற்றமுநின்
றிடம்பெறா தனவாய் மண்மேன்
மொய்த்தேநின் றமைகருதி யிருநிலத்தெய்
தாதவரா மொழியா வேனை
மெய்த்தேவர் களும்விசும்பின் மிடைந்தனராய்
நின்றதொகை விளம்பொணாதே. (கருஅ)

வேறு.

1992 அண்டரண்ட பகிரண்டத் தப்பா லாகி
யப்பிரா [1]கிருதமதா யனந்த வீதி
கொண்டபுகழ்ப் பரந்தாமந் தனினின் றோவாக்
கொழும்பொன்வட சிகரநெடுங் குன்றின் மீதே
வண்டிமிர்செம் பதுமமலர்த் தொகுதி பூத்த
மையாழி வருவதென மறைக ளாய
சண்டமுறு மிருஞ்சிறைப்புட் பிடரின் மீதே
சமர்புரியைம் படைதரித்த தடக்கை யோடும். (கருகூ)

1993 வளங்கெழுபீ தாம்பரமு மருங்கு டஇவால்
வயிரமணிப் பரனிறைகிண் கிணிதாள் வீக்கி
யிளங்கதிர்கால் கவுத்துவநின் றிலங்கு மார்பத்
திந்திரையு மெழில்வனமா லிகைதோய் தோண்மேற்
றுளங்குபெரும் புவிமகளும் வாழ்வு கூரச்
சுடர்மணிகள் குயின்றமுடிச் சோதி யோடும்
விளங்குமிரு சிகையணிவார் காதி னோடு
மெய்யடியார்க் கருள்புரியும் விழியி னோடும். (கசு0)

[பி-ம்.] [1] கிருதமா. சா.



1994 முத்திதரும் படிக்குமுதல் வித்தாய் நின்றோன்
முத்தியார் [1]நித்தருமுத் தருநின் றேத்தச்
சித்திரைத்திங் களினுத் திரத்திற் றோன்றத்
தேவர்குழாந் தருமலர்தூய்த் தேவர் தேவே
வித்தகனே யரிகரியென் றொருங்கி ரூலின்
மிசைத்துவன்றி முரலளியின் மீச்சென் றீண்டு
மத்திறங்கண் டருள்பெருகுஞ் சேனை நாத
னடர்ப்பிரம்பு கொடுதிருமுன் பகற்றி னானே. (கசுக)

மூன்றுந் தொடர்.

வேறு.

1995 பேரா யிரமுந் தனித்தனியே
பேதம் பெறவெவ் வுழியினுநின்
றோரா யிரங்கா ளமிழற்ற
வுலப்பில் பறவைத் தொகுதிகளும்
நாரா யணன்வந் தனனெனவே
நவின்று களிப்ப நறுமலரோ
னாரா வமுதே யுயிரேயென்
னறிவே சரணா கதியென்றான். (கசுஉ)

1996 வெள்ளிச் சயில மிசையிருந்த
மிளிர்பொற் பவளச் சயிலமெனும்
புள்ளிச் சிறைவண் டறையிதழிப்
பொலம்பூ வுடன்வெண் மதிக்கொழுந்துந்
தெள்ளித் [2]தெளிவெண் டிரைநதியுஞ்
செருகுஞ் சடிலா திபனரவப்
பள்ளித் திருப்பாற் கடற்[3]றுயின்ற
பரமா சரணா கதியென்றான். (கசுரு)

[பி-ம்.] [1] முத்தருநித் தருநின் றேத்தச். சா. [2] தெழி. ச. [3] றுறையின். சா.

1997 விண்ணா றுடைத்தா யிரமுகமாய்
மேரு மிசைதொக் குகுவனபோற்
கண்ணா யிரமுஞ் சுரந்தொழியாக்
களிப்பிற் புனல்[1]வார்ந் திழிதரவே
புண்ணார் குலிசப் படையுடையோன்
பூவைப் புதுமென் மலர்பொருவும்
வண்ணா கமலா சனத்திருவின்
மன்ணா சரணா கதியென்றான். (கசுச)

வேறு.

1998 சலம்புரியு மெறிதிரைப்பார் மகளுமலர்
மடந்தையுஞ்சந் ததமும் விள்ளா
நலம்புரியு முழுமுதலை யிதயமுறத்
தழைதருமெய்ஞ் ஞான வாழ்வின்
வலம்புரிகட் [2]காசும்வலம் புரிதொறுமா
தவனுமது வலஞ்செய் பான்மைப்
புலம்புரியு மென்றான்மெய்த் தவம்புரியுந்
திறத்தினையார் புகழ வல்லார். (கசுரு)

1999 கொங்கார்தண் ணறுந்துளபம் புனைசோதி
திருவருளைக் குறிப்பி னோக்கிச்
சிங்காத புகழ்த்தேவர் சலஞ்சலமாய்ப்
பிறந்திலமே திரைமீ தென்பார்
பங்காரும் வலம்புரியாய்ப் பிறந்திலமே
யென்பர்சிலர் [3]பனிநி லாவெண்
சங்காகப் பிறந்திலமே யென்பர்சிலர்
சிலர்தவமே தக்க தென்பார். (கசுசு)

[பி-ம்.] [1]பாய்ந். சா. [2]காசுவலம். சா. [3]பணிநிலாவெண். ச.



2000 பைச்சங்கந் தருமுரகன் பரித்தகடற்
புவியளந்த பதத்தே சென்னி
வைச்சங்கந் தளிர்ப்பவலம் புரிக்கரசு
கிடந்திரைக்கும் வாழ்வை நோக்கிக்
கைச்சங்க முதல்வனுக்குங் காற்சங்க
முளதெனுஞ்சீர் காட்டிற் றென்றே
மெய்ச்சங்கங் கமர்குழாத் தொடும்வியந்து
களித்தனராய் விளம்பி னாரே. (கசுஎ)

2001 முத்தியா னதைவளர்த்துத் [1]துறக்கமுறு
புரந்தரனு முதனூல் கூறு
முத்தியா னதையுணர்ந்த சதுமுகனுஞ்
சிவனுமென முறையே நின்றோர்
முத்தியா னமுங்களிக்க முத்தியா
வையுங்[2]கொடுத்த முதலே கொண்டு
முத்தியா னதுகொடுத்த முதல்வனுமிந்
திரைகளிக்க முயற்சி கூர்ந்தே. (கசுஅ)

2002 முத்திபெறு சேனையர்கோன் முதலவர்தம்
[3]முகநோக்கி முகமன் கூறி
உத்தமஞா னம்பயின்ற சலஞ்சலமே
தினிக்குளனை யுவந்த ஞானப்
பத்தரெனத் தருமவருட் டிலகமிது
தனக்குமிரு பாங்கர் மேய
கொத்துடைமற் றவையினுக்கும் பாந்தாமங்
கொடுத்தன்னைக் கொண்மி னென்னா. (கசுகூ)

2003 பங்கயநாண் மலர்தொறும்வண் டினங்குழுமிக்
குழுமியுழை பரப்பு மென்பூங்
கொங்கலைந்த புனற்பொருநைத் துறையினையு
நிரந்தரமுங் குளிறு நீர்மை

[பி-ம்.] [1]துளக்கமுறும். சா. [2]கொடுத்தன். சா. [3]முகனோக்கி. ச.

வங்கநெடுங் கடற்படுகர்த் துறந்துதினம்
படிந்ததனுன் மல்லன் ஞாலஞ்
சங்கணிதண் டுறையெனவே புகழ்ந்துரைக்கும்
படிக்கொருபேர் தந்தே னென்றான். (கஎ0)

வேறு.

2004 பெட்பகற் றறிஞர் நீத்த பிசிதவன் குரம்பை நீத்து
விட்பகல் பொருவு மான்மா விழுமிய வுருக்கொள் காலைக்
கொட்பவெத் திசையுந்தூதர் குழுவொடுந் துவன்றித் தெய்வப்
புட்பக விமானத் தேற்றிப் பொலிந்துயர் விசும்பிற் போனார். (கஎக)

வேறு.

2005 ஆந்தனையுஞ் சதுமறையா தியவுணர்ந்து
மருந்தவஞ்செய் தமைந்த சாந்தி
யேந்தெழினுன் முகன்பெறுதற் கரிதாய
தெளிதாய திவற்றிற் கென்றே
தாந்தனையும் வரனுடைநா ரதன்றனையுஞ்
செழுங்கமலத் தவிசி னுடன்
காந்தனையுந் தமிழ்க்குருகா புரிதனையும்
வியந்தனர்நற் கடவு ளாரே. (கஎஉ)

2006 தேவருக்கு முனிவருக்குஞ் சிதையாத
வரனுடையிந் திரற்கு மற்றை
யாவருக்கும் பெறற்கரிதா முத்தியிவற்
[1] றினுக்கெளிதா யினதே கண்டா
லாவதெவ னையுணர்வா லாறறிவான்
மெய்யுணர்வொன் றதுவே சாலும்
பாவமெனுந் தொடர்பறுத்தந் தாமமுறும்
படிக்கெனவும் பகர்ந்தார் விண்ணோர். (கஎங)

[பி-ம்.] [1] றுக்கெளிதா. சா.



2007 திரைத்தலை நாலை யெழுந் தெழித்தன சிகர பார
வரைத்தலை முகிலி னீட்டங் குளிறின வான யாற்றி
னிரைத்தனர் பகற்செய் வார்பன் னிருவரு நிழல்வண் டார்க்கும்
விரைத்தரு மலரை வாரி வீசினர் விண்ணோர் மன்னோ. ()

2008 கின்னரர் நாத கீதங் கிளைத்தன ரிப்பா லப்பால்
மன்னிய விரசை யாடி மகிழ்ந்தமா னவன்கை தீண்டத்
துன்னருஞ் சிறப்பி னன்கு தோண்மரீஇ யெழலுந் தூசும்
பொன்னருங் கலனுங்கொண்டு பொருந்தினர் பொன்ன னாரே. ()

2009 விருந்தெமக் கடைந்த தென்றே மேதகு சிறப்பின் வானோர்
மருந்தினு மினிமை கூர்ந்த மதுரநன் முகமன் கூறித்
திருந்தடிப் பதுமப் போதொண் சென்னிசேர்த் தினராய் வாழ்த்தி
யிருந்திவ ணேகு வீரென் றனர்சில ரெதிர்கின் றாரே. ()

2010 மாதவன் றமர்வந்தெங்கோனழைத்தனன்வருகிரென்றுத்
தூதுவர் விரைந்தே யொல்லைத் தொல்லைநான் மறையுங் காணச்
சீதரன் றிருமுன் பெய்தச் செய்த்தகன் றெதிர்ந்த மைந்தர்க்
காதரம் படைத்தார் போலத் தழீயின னமரர் கோமான்.()

2011 அங்கவானந்தபோகத்தடைந்துமெய்த்தமருளொன்றுய்த்
தங்கின ரிப்பா லொண்பொற் சததளக் கமலை கோமான்
பங்கயா சனத்தோன் போற்றப் பாய்புனற் பொருநைச் செல்வம்
பொங்குநீ [1]ணகர நாப்பண் பொலிந்துநின் றருளி னனே.

வேறு.

2012 தண்ணுறுப் பதுமனெண் சந்த்ர சேகரன்
விண்ணுலாங் கடுவளி விழைமண் ணீரன
லெண்ணிலா வுயிரிவை யாவுந் தோன்றுமு
னண்ணலா கியமுத லாதி நாதனே. (கஎகூ)

2013 உடைத்தொழு கியமதுக் கமல யோனியும்
விடைக்கொடி முதல்வனும் விரிந்த நீள்பொழில்
படைக்கவுந் துடைக்கவும் பகுத்தி யாவையும்
அடைக்கலம் புரிந்தமா லாதி நாதனே. (கஅ0)

[பி-ம்.] [1] ணகரி னுப்பண். சா.

2014 சீதவண் டுழுதிதழ் கிளைக்குங் கேழ்கிளர்
த்ாதவிழ் தமனியப் பொகுட்டுத் தாமரைப்
போதகங் குழுமுபைந் தடத்துட் போதக
நாதனென் றுரைத்தமா லாதி நாதனே. (கஅக)

வேறு.

2015 வாம பாகத் தொடுவலப் பாகமுன்
சேம மாகிய சேனையர் காவல
ஞம வென்றி யனந்தன்மெய்ஞ் ஞானநற்
காமர் வென்றிக் கலுழனு நிற்பவே. (கஅஉ)

2016 சண்ட ரும்பிர சண்டருஞ் 'சார்புறப்
பண்டை வானவர் பத்தியிற் சூழ்தரப்
புண்ட ரீகையும் பூதலத் தோகையுங்
கண்டு தாமரைக் கண்களி கூரவே. (கஅங)

வேறு

2017 ஆதிநா தன்னெனப் பொலிந்து நின்றருள்
சோதியா மலர்மக டுணைவ னெண்ணிலாச்
சாதியா கியசரா சரத்துட் டன்னையும்
வேதியா நின்றவன் விதியை நோக்கியே. (கஅச)

2018 இன்றுதான் றொடுத்திவ ணெம்மை வைகலு
நன்றியா யருச்சனை நயத்தி யென்றனன்
வென்றிசால் மழவிடை விமலன் வாசவன்
றுன்றுவா னவர்களிற் றொழுது நிற்பவே. (கஅரு)

நாலுந் தொடர்.

வேறு.

2019 அந்த வேலையி லெம்பிரான் றனைநினைந் தயனுஞ்
சிந்தை செய்திடச் சிறந்ததவ் வுழித்திரு விமானம்
பந்தி சேர்கட வுளரிலாப் பான்மையி னெவர்க்கும்
வந்து தோன்றின செம்பொன்மா ளிகைகளு மறுகும். (கஅசு)



வேறு.

2020 பொதியமால் வரைதரும் பொருநை யாந்திரு
நதியின்வான் றுறைப்புனல் படிந்து நாதனை
விதியினு லருச்சனை செயற்கு வேதநூன்
மதியினன் மலரின்மஞ் சனங்கொண் டெய்தினன். (கஅஎ)

2021 *வலம்புரி துவைத்தன வரம்பி லாம்பனின்
றுலம்பின காடிகை யுலப்பில் பேரிகை
சிலம்பின முழவுடன் றெழித்த தெங்கணு
நலம்புரி [1]கின்னர ரெழுப்பு நாதமே. (கஅஅ)

2022 நாதன்மா தவனெனு மறையை நாடொறும்
பேதமற் றுணர்தெசப் பிரமர் தம்மொடு
மூதுணர் முனிவரோ ரெழுவர் முன்னியே
வேதவாய் மையைமுதல் விளம்பி னார்களே. (கஅகூ)

2023 மஞ்சயர் வுறுங்குழல் வனச வாண்முக
நஞ்சயர் வுறுந்துணை நயனத் தேமொழி
விஞ்சையர் நடஞ்செய மிகுந்த தெங்கணும்
பஞ்சயர் வுறும்[2]பதச் சிலம்பின் பாணியே. (ககூ0)

வேறு.

2024 ஆசிகூறின ரிமையவ ரரிகரி யெனும்பேர்
பேசி நின்றனர் மறையவர் பிரமனும் பெரியோன்
மூசி வண்டிமிர் கமலையை முன்னிடா முதன்மேல்
வீசிநின்றனன் புனலுநன் மலருநூல் விதியால். (ககூக)

2025 எண்ணி ரண்டுப சாரமு முறைமுறை யியற்றிக்
கண்ணி ரண்டொடா றுடையவன் கமலையே வலினு
லண்ணல் கேசவன் றமரெனுஞ் சேனையா திபன்பின்
வண்ண மாதவர் கணந்தொழ விருந்தனன் மகிழ்ந்தே. ()

---

[பி-ம்.] [1] கின்னரர் நவின்ற. மா. [2] பத சிலம்பின், சா.

வேறு.

2026 இருந்தகான் முகனைப் போற்றி யிருந்தவப் பிருகுவோடு
மருந்தவ மாற்கண் டேனை யாதியர் முனிவர் யாரும்
பெருந்தகை முகுந்தன் வைகுந் தானமும் பேத மாகிப்
பொருந்திய திறமு மெந்தாய் புகலெனப் பணிந்து நின்றார்.

வேறு.

2027 ஆதிக் கேத்திர மிதுதிகழ் வராகமோ டநந்த
சோதிக் கேத்திரஞ் சிறிதுகீழ் மருங்குறத் தொடர்ந்த
நீதித் தாந்தனுஞ் சங்கமா முனிவனு நியமஞ்
சாதித் தோங்கிய தானமோ டைந்துறுந் தானம். (௧௯௪)

2028 ஆதி நாதனு திப்பிரான் பொலிந்துநின் றருண்மா
லாதி மூர்த்தியா யிப்பிரா னுதிநா ரணன்மன்
நீதி நின்றவா திப்பிரா னீள்குடக் கூத்தன்
சோதி மிக்கவா திப்பிரா னுமெனச் சொன்னான். (௧௯௫)

இரண்டுந் தொடர்.

2029 கள்வ னெம்மிடர் கடிபவன் காசினி வேந்தன்
வள்ள லாமர விந்தலோ சனன்வளர் சுரர்கோன்
புள்ள லம்புதார்க் குளந்தைமால் செழுந்தமிழ்ப் புலவோர்
தெள்ளு பேரைமால் வைத்தமா நிதியெனச் சிறந்தே. ()

2030 திக்கின் மேவிய வெண்மரு மிவன்றிரு வுருவின்
மிக்க வாழ்வெனக் குறித்திரு மினியிறை வியனீர்
தொக்க பூதலத் தருமறைத் துணிவினைத் தொகுத்தே
யுய்க்கொள் வண்டமிழ் மாறனு மெனமதித் துரைத்தான்.

இரண்டுந் தொடர்.

வேறு.

2031 மருளற வணங்கு கேள்வி மதிநல னடைந்த தொன்மைப்
பிருகுவை மார்க்கண் டேனைப் பின்னுமின் புறவே நோக்கிப்
பொருவரு முதல்வற் கேற்ற வருச்சனை புரிந்தெஞ் ஞான்று
மிருவரு மிருத்தி ரீங்கென் றேகினு னெண்க ணனே. ()



2032 போதினுன் றணந்த ஞான்றேபோதமாண்பொருள்வந் துற்ற
கோதிலா முனிவ ராய விருவருங் குரவன் சொன்ன
வாதிநா தனையே யாதி யாயவொன் பதின்மர் தம்மை
நீதியா லருச்சித் தன்பாய் நியதியு நிகழு மன்றே. (௧௯௯)

2033 இன்னணம் பகர்ந்த வாய்மை முழுதுணர்ந் திருந்தவத்தோர்
முன்னவ னெனவே நின்ற முழுதுணர் வியாதன் றன்னைச்
சொன்னலம் பயின்ற கேள்விச் சுகன்முத லாய தூயோர்
மன்னிய சிறப்பின் வாழ்த்தி வணங்கின ராகி மன்னே. ()

2034 திருநக ரதனைச் சார்ந்தே திருநதி யதன்க ணாடிக்
கருவரை யெனவே நின்ற கண்ணனைக் கண்ணிற் கண்டு
மருளறு குணத்தி னோடும் வைத்தகண் வாங்க லாற்று
துருகிய வுளத்த ராய்நீ டுயர்வரை யடவி சார்ந்தார். (௨௦௧)

இரண்டுந் தொடர்.

வேறு.

2035 இத்துணையும் வேதவியா தன்சுகனுக்
கிசைத்தனவா யிசைந்த தாமேல்
வித்தகனுந் திருமகிழ்மா விகைப்பெருமா
னுதித்துளதா மேன்மை யெல்லாம்
பத்திமையொன் றில்லாதேற் காரியன்றன்
கன்னபரம் பரையாய் வந்த
வத்திறத்தா லுணர்த்த வுணர்ந் தனனாகி
யுணர்த்துவலென் றன்புற் றேனே. (௨௦௨)

பதினெட்டாவது: சங்கன் முத்திபெற்றசருக்கம் முற்றும்.

## ௧௧. மாடத்திருக்குருகூர்ச்சருக்கம்.

2036 பூந்திரு மடந்தை செல்வக் கருணையும் பூந்து ழாய்மால்
காந்தியு மொண்மை ஞானக் காட்சியுங் கலைக ளாய்ந்த
சாந்தியு முலக மீட்டுந் தவத்தினோர் படிவத் தாகு
மேந்தெழில் வகுள மார்பத் தெம்பிரான் சரிதை சொல்வாம்.

வேறு.

2037 இறைவன்மன் னுயிரென் றிருவழிப் [1]படுத்தற்
கிலக்கணம் பூர்த்தியாய் மண்மேற்
பொறையுயிர்த் தவண்மென் முலையமு தருந்தாப்
பொறையொடு மிறைநிலைக் கிரங்கி
மறைதமிழ்ப் படுத்தி யளித்தநீ ணிதியை
வைகலு மெனதுபுன் சொலினா
னிறையுறப் புகழ்வா னோற்றநோன் பினையே
நினைதொறுங் களிக்குமென் மனமே. (௨)

2038 ஒருதுறை யொருபாட் டொருமண மெனலா
யுறுபொரு ளான்குழூட் கொண்ட
பொருணல னின்சொ னலனனி நலத்தாற்
புணர்பொருட் டொடர்நிலை யதுவாய்த்
தெருளுறப் புணர்த்த பனுவலொ டிராமன்
செயல்புணர் பனுவலும் பிறந்த
விருநிலத் தினிலித் திருத்தகு சரிதை
யெனதுபுன் சொற்களோ பெறுமே. (௩)

வேறு.

2039 ஒப்பினான் மறையோ [2]ரேட்டிற்
பொறிப்பனென் றாட்கொண் டொண்மை
தப்பினான் வெண்மை மானுஞ்
சதிர்பெறுந் தவலில் ஞான

[பி-ம்.] [1] படுதற் கிலக்கணம். ச. [2] ரேட்டுப். ச.



வைப்பினா லிறையின் வாழ்வை
மயர்வறத் தெரித்து மண்மேற்
செப்பினான் சரிதை யானென்
சிறுசொல்லா லமைக்கு மாறே. (௪)

2040 கனையிளங் கதிரி னீட்டங்
கடுத்தநுண் ணுணர்வாற் கற்றோர்
தனைப்படுத் துதற்கு மெட்டாத்
தத்துவப் பொருளை மூடம்
வனையுருப் புணர்சொற் பேதை
வடித்துரை கொளுத்தும் வாய்மை
யனையதொன் றிதனை யானென்
னருத்திகூர்ந் துணர்த்து மாறே. (௫)

2041 அற்பிலாள் கொழுநன் றன்பா
லாடவர் குறுகி லொல்கி
யிற்புகா ளில்லின் வைகு
மியல்பில்லா ளிடத்துத் தெய்வக்
கற்பினு முரிமை யெல்லாங்
கவின்பெற வடங்கிற் கல்விப்
பொற்பிலாச் சிறியேன் புன்சொற்
கடங்குமிப் பொருளு மன்றே. (௬)

வேறு

2042 வின்மானுங் கொடும்புருவ மடந்தையர்தம்
முலைமுகட்டு வேய்ந்த தாமக்
கன்மாலை யிளங்கதிர்நின் றிருடொரந்தும்
வறிஞரில்லாக் காட்சி யானுஞ்
சொன்மாலை புனைந்தறிஞ ரிரவறியா
தெனவுரைக்குந் தொலைவில் [1]சீர்த்திப்
பொன்மாடத் திருக்குருகூ ரெனவுலகத்
தொருநகரம் பொலிந்த தன்றே. (௭)

[பி-ம்.] [1] கீர்த்திப். சா.

2043 துறந்தாரு மனுநூலிற் புடைபெயர்நண்
ணுநெறிக்குத் தோலா தில்லஞ்
சிறந்தாரு மிருவயினுந் தெரிவனயா
வையுந்தெரிந்து தெளிந்த ஞானம்
பிறந்தாரு மிறந்தாரும் பெறுகதிவீ
டெனத்துணிந்தப் பெயரை நாட்டன்
மறந்தார்வ முடன்மாடத் திருக்குருகூ
ரெனப்புனைபேர் மதிப்ப தாமே. (௮)

2044 கம்பவா ரிதிக்கரசு பாலாழி
நதிக்கரசு கங்கை விண்டோய்
அம்பொன்மால் வரைக்குலங்கட் கரசுநடு
மேருகிரி யலர்கட் கெல்லாம்
வம்புலா மலர்ச்சரோ ருகமரசு
திரையெறிநீர் வளைவ ளாகத்
திம்பர்மா நகர்க்குலங்கட் கரசெனலிந்
நகரினையே யாரு மன்னோ. (௯)

2045 இற்புகா வில்லறமே [1]நிகழ்த்துநருந்
துறவறத்தை யிளிவொன் றில்லா
வற்புகா நிகழ்த்துநருந் தாமன்றி
நிறைபொறையொன் றறியா ரேனுந்
தற்புகா விழைந்தனயா தெனினுமவர்
குறிப்பறிந்து தாலால் விண்ணோர்
கற்பகா டவியுடனக் காமதே
னுவுநிகராங் காட்சித் தாமே. (௧௦)

வேறு.

2046 அடித்தல முரகன் மவுலிதோய்ந் தூரத்தி
னமைத்தபொற் பொறிபுணர்ந் தகல்வான்
முடித்தல மணவ நிமிர்ந்துகார் நிறமே
முழுதுமெய் தழைந்திள வெயிலிற்

[பி-ம்.] [1] நிகழ்த்தினருந். சா.



பொடித்தெழு பரிதி வலம்பயின் றிடத்திற்
புரிவளை குளிறுகாப் புடைத்தாற்
கடிப்பசுந் துளப நெடியமால் பொருவுங்
கனகமா மதிணிலை யுரைப்பாம். (௧௧)

2047 யோசனை யொருநூ றுயிர மெனவே
யுயர்ந்தபொன் மலைபெறு சிறிய
மாசறு கொழும்பொன் மலையென விசும்பின்
மழைதவழ் குடுமியி னுயர்ந்தே
தேசுடைப் புவன முழுதுமுட் கொண்ட
திகிரிமால் வரைபெறு சிறிய
வாசறு திகிரி வரையெனப் பணைத்தே
யகலிடத் தகல்விய லனவே. (௧௨)

2048 அருக்கன்வான் வலம்புக் கலம்வருஞ் சுவண
வருவரை யினைமயன் குகைப்பெய்
துருக்கிவாக் கியதிற் பொருத்துறீஇ வரியொன்
றுறுவதற் கரியவா யுகாந்தப்
பெருக்கினீர் குறுகா வரத்ததெவ் வுயிரும்
பிழைப்பதற் கவணலாற் பினையென்
செருக்கினா லிகல்செய் பவர்மலைத் தறியாச்
செரு[1]மிகுந் திறத்தவென் பதுவே. (௧௩)

2049 பொற்பல புகன்றென் மூவறு படையும்
புணர்முறை புணர்த்தமாண் பொறிசேர்
பற்பல சிறப்பைந் துகிற்கொடி நுடங்கும்
பசும்பொனா லியன்றநோன் புரிசைக்
குற்பல மருட்டு முபயவாட் டடங்க
ணொள்ளிழை மகளிர்தம் முலவாக்
கற்பல தொருவர் தனதுதற் காக்குங்
காவலாற் பொருவெனக் கணித்தே. (௧௪)

[பி-ம்.] [1] மிகு. சா.

2050 எப்பொறி களுநின் றியற்றுவா ருறுகண்
 ணிணைகது வுறவெயிற் புறத்தாய்
மெய்ப்பொறி யினர்தா மிகல்விளைப் பதற்கு
 விரைந்தெதிர் பொழுதினக் கணத்துட்
குப்புறப் படர்ந்தங் கவருறுப் பினையே
 குறைத்துயிர் குடித்துமீள் செயலால்
அப்பொறி [1]யல்லா தவணுறை பவர்க்கெப்
 பொறிதரு மரசர்கள் பொறியே. (கரு)

2051 நிருதரா லவுணர் குலங்களாற் பிணியா
 னிரப்பினான் மறலியா லிடர்தான்
வருவதொன் றிலதா யொருவரோ டொருவர்
 மாறுபட் டொழுகலு மிலராற்
றிருவுடை யடிக ளயோத்திகள் ளாணிற்
 செறிந்துளா ரெய்துபே ரின்பம்
பொருவரு மதனுட் சிறந்துளார் தினமும்
 பொருந்துபே ரின்பமும் புகலில். (கசு)

2052 வஞ்சமோ ருருக்கொண் டனையதா னவரால்
 வயிரவெந் தழற்பிழம் பெறியு
மஞ்சலி னயனத் தரக்கரா லிடர்கூர்ந்
 தபயமே யபயமென் றலறித்
துஞ்சலி னயனத் திந்திரா தியர்தந்
 துறக்கமுந் துறந்தெமக் கினியுன்
றஞ்சமே யுளதென் றெதிர்முனங் கொடிக்கை
 தனிலழைத் தருள்செய்காப் புடைத்தே. (கஎ)

2053 புகுவன தவமுந் தருமமும் புகழும்
 பொறையுமூ தறிவுநீ டருளு
மிகுபொருட் டிறமே தெருட்டுநான் மறையும்
 வேள்வியுங் [2]குலனுநல் லொழுக்குந்

---

[பி-ம்.] [1] யில்லா, சா. [2] குலமுதல், சா.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுதல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 3. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | பொருட்டொகைநிகண்டு | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் | 0 | 6 | 0 |
| | *ஷை ஆங்கிலத்தில் | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினர்கோயில்அந்தாதி | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன்தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.